பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9689)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 30 வெள்ளிக்கிழமை (12.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176

## ஜூலை 13 முதல் 16 வரை
## தபால் மூலம் வாக்களிக்கலாம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு 4 நாட்களுக்கு நடைபெறும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 13, 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தபால் மூல வாக்களிப்பு நடைமுறை மற்றும் பின் ▷15

### யாழ். தேர்தல் தொகுதிக்கே
## மிக நீளமான வாக்குச் சீட்டு


கோப்புப்படம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலிற்காக அச்சிடப்படும் வாக்குச்சீட்டுக்களில் யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களிற்கான வாக்குச்சீட்டுக்களே மிக நீளமானவையாகும்.

இந்த இரண்டு மாவட்டங்களின். வாக்குச் ▷15

# போராட்டம் செய்தால் தனிமைப்படுத்தப்படுவீர்!

### அமைச்சரவையும் அனுமதியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல எச்சரிக்கை



(கொழும்பு)

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன, போராட்டங்களில் ஈடுபடுவோர் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்படுவார்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

**கொரோனா வைரஸ்** பாதிப்பு **1877** புதிய தொற்றாளர்கள் **08** பலி **11**

## கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலை கொரோனா சிகிச்சை வைத்தியசாலையாக மாற்றம்

### பல அமைப்புகள் கடும் எதிர்ப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலையை ஒரு மாதத்திற்குள் கொரோனா சிகிச்சை வைத்தியசாலையாக மாற்றும் முடிவை வடக்கு சுகாதார அதிகாரிகள் நேற்று எடுத்தனர். வடக்கில் வேறு பொருத்தமான வைத்தியசாலைகள் உள்ளன என்பதை பல்வேறு தரப்புக்களும் சுட்டிக் காட்டியதை புறமொதுக்கி, பெருமளவு ▷15

### இளம் குடும்பப் பெண் சாவகச்சேரியில் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - பெருங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இளம் குடும்பப் பெண் ஒருவ ▷15

## கொரோனா பரவ வாய்ப்புண்டு

### தொற்று நோய் விஞ்ஞான ஆய்வுப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

கோவிட் - 19 வைரஸை முழுமையாக கட்டுப்படுத்தி விட்டோம் எனக் கூற முடியாது.

நாடு வழமை நிலைக்கு திரும்பியிருப்பதால் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் பொதுமக்கள் மத்தியில் இருந்து வைரஸ் தொற்றுப் பரவ வாய்ப்புள் ▷15

### யாழைச் சேர்ந்தவர்
## கனடாவில் படுகொலை



▷15

## கிணற்றில் தவறி விழுந்த 11 வயது சிறுவன் பலி

### முல்லை தேவிபுரத்தில் சோகம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ▷15

## 16 வயது மாணவிக்கும் சகோதரனுக்கும் வாள்வெட்டு

### சாவகச்சேரி நுணாவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் மாணவியொருவருக்கும் அவரது சகோதரனுக்கும் வாள் வெட்டுத் தாக்குதல் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

இதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளளனர். ▷15

## கெரோயினுடன் அரியாலையில்
### குடும்பப் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

உயிர்க்கொல்லி போதைப் பொருளான ▷15

## அமைதிப் போராட்டம் மீது பொலிஸார் வன்முறை!


### சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மீது வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என சர்வதேச மன்னிப்புச் சபை தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் அதிகாரத்திலிருந்தவர் ▷15

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## M.A.பஞ்சநாதன் (J.P)

(ஓய்வுநிலை வங்கி அலுவலர், மக்கள் வங்கி, வட பிராந்திய தலைமைக் காரியாலயம், யாழ்ப்பாணம்)

திதி: தேய்பிறை சப்தமி
12.06.2020

தோற்றம் 13.12.1942 | மறைவு 28.05.2016

எங்களின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும்
அரும்பாடுபட்டு
அணையாத விடிவிளக்காய்
நாம் அறிந்த நாள் முதலாய்
அன்போடு அரவணைத்து
அமைதியின் சிகரமாய் நின்று
எம்மை வாழ்வாங்கு வாழ வைத்து
அன்பை பண்பை அறிவை போதித்த
எங்கள் அன்பு அப்பாவே!
ஆண்டு நான்கு ஆனது ஆறவில்லை
எம் துயரம்

உங்களின் ஆத்மா நாராயணனின்
பாதங்களில் சாந்தி பெற தினமும்
இறைவனை வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்**
69B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2560

(2995)

# யாழ். கல்வி வலய மாணவர்களுக்கு இலவச செயலட்டைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பொதுப் பரீட்சையை எதிர்நோக்கும் தரம் - 11, தரம் - 5 மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்தும் நோக்கில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அவர்களின் வழிகாட்டலில் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் நிபுணத்துவம்மிக்க ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட பாடக் குறிப்புக்கள், வினா-விடைகள் உள்ளடங்கிய விசேட செயலட்டைகள் பாடசாலை அதிபர்கள் மூலமாக மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.இணையவழி கற்பித்தலில் இணைய வசதியற்ற வறிய மாணவர்கள் பாதிப்புறுவதாகப் பலராலும் ஆதங்கங்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில் அதனை ஈடு செய்யும் வகையில் மேற்படி விசேட செயலட்டைகள் குறித்த வகுப்புக்களுக்கான சகல பாடங்களுக்கும் தயாரிக்கப்பட்டுள்ளன.

யாழ். வலயப் பாடசாலைகளில் குறித்த வகுப்புக்களில் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் இலவசமாக கையளிக்கப்பட்ட குறித்த செயலட்டைகள் பயன்மிக்கவையாகவுள்ளன எனப் பெற்றோர் கருத்துரைத்தனர். விரைவில்க.பொ.த உயர்தர வகுப்பு மாணவருக்கும் இத்தகைய செயலட்டைகள் வழங்கப்படுமென யாழ்.கல்வி வலயம் தெவித்துள்ளது. (ம-3)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது பேரன்புக்குரிய
சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியர்

## உயர்திரு பாலசுந்தரம் காசிநாதன் J.P(W.I)

Sp.Trd.B.A.(cey),PGDE,M.Ed,M.A.(Tamil)



அவர்கள் அண்மையில் 17.11.2019 மலேசியாவில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இலங்கையர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு கௌரவ கலாநிதிப் பட்டம் இவரின் சமூக சேவைகளுக்காக (Brampton) சர்வதேச பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.இவர் ஏற்கனவே பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ளதுடன் தொடர்ந்து சமூகத்திற்கும் நாட்டிற்கும் பல்வேறு சேவைகளை முன்னெடுக்க வேண்டுமென்றும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: வி.தயாபரன்
தயா வெளியீடு சிவ தயா அச்சகம்
சைவ பரிபாலன சபை, பொருளாளர்.

(3004)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# தேவை

தட்டச்சு இயந்திரம் பழுது பார்ப்பதற்கு ஆள் தேவை. (C-9691)


தொடர்புகளுக்கு:- 0778535693 பருத்தித்துறை

# பூசணிக்காய் தேவை

உடனடியாக மொத்தமாக கொள்வனவு செய்யப்படும். (3001)

தொடர்புகளுக்கு:- 0768772658

# 31ம் நாள் நினைவு தினமும் சபிண்டிகரண அழைப்பும்



## அமரர் க.திரவியம் J.P

தலைவர், ஆவரங்கால் கிளை
இலங்கை தமிழ் அரசுக்கட்சி

தோற்றம்
20.04.1945

மறைவு
14.05.2020

கடந்த 14.05.2020 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டி கிரியையின் பின் இடம்பெறும் சபிண்டிகரண கிரியை நாளை 13.06.2020 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குங்குமம் பிரஸ்த்தம்
சிவன் வீதி,
ஆவரங்கால்

**குடும்பத்தினர்.**
077 047 6598

(3003)

## ஒழுக்கமானதும் பாதுகாப்பானதுமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கான செயலணி ஆரம்பித்து ஒரு வாரம் கூட முடியவில்லை

# அமைதிப் போராட்டத்திற்கு எதிராக வன்முறை பிரயோகிக்கப்பட்டது ஏன்?

## ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பு கேள்வி

(கொழும்பு)

**ஒழுக்கமானதும் பாதுகாப்பானதுமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கான விசேட செயலணியொன்று ஜனாதிபதியினால் நிறுவப்பட்டு ஒருவாரம் கடந்திருக்கும் நிலையில், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸாரினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்க விடயமாகும் என்று ஜனநாயத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பின் இணையப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.**




அமெரிக்காவில் இடம்பெற்ற கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிளாய்டின் படுகொலைக்குக் கண்டனம் வெளியிடும் வகையில் முன்னிலை சோசலிசக் கட்சியினால் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கத்தூதரகத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட அமைதிப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமை மற்றும் அவர்களைக் கைது செய்தமைக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனங்கள் வலுத்து வருகின்றன.

ஜோர்ஜ் ஃபிளாய்டின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் விதமாக இடம்பெற்ற அமைதிப்போராட்டத்திற்கு எதிராக வன்முறை பிரயோகிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் பல்வேறு தரப்பிலிருந்தும் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

அத்தோடு இத்தகைய நடவடிக்கைகள் இனி இடம்பெறக் கூடிய மோசமான செயற்பாடுகளுக்கான ஓர் சமிக்ஞையாகும் என்று சிவில் சமூக மற்றும் மனித உரிமை அமைப்புக்களும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்களை பொலிஸாரால் கைது செய்து பின்னர் பிணையில் விடுவித்துள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டதன் பின்னர் தெற்கில் நடைபெற்ற அமைதிப் போராட்டத்தில் பெரும்பான்மை சிங்களவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சம்பவம் இதுவாகும்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கொவிட் - 19 தடுப்பு பாதுகாப்பு விதிமுறைகளுக்கு முரணாக செயற்படலாம் எனக்குறிப்பிட்டு இப்போராட்டத்திற்கு எதிராக நீதிமன்றத் தடையுத்தரவை ஏற்கனவே பொலிஸார் பெற்றிருந்தனர். எனினும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றிய போதிலும் அவர்களில் பெருந்தொகையானோரை பொலிஸார் ஒரே வாகனத்தில் ஏற்றியதனூடாகவே அவ்விதிகள் உடைக்கப்பட்டன.

இந்நிலையில் இருவாரங்களுக்கு முன்னர் மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிச்சடங்கில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டபோது பொலிஸாரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமை குறித்தும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.


அத்தோடு ஒழுக்கமானதும், பாதுகாப்பானதுமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கான விசேட செயலணியொன்று ஜனாதிபதியினால் நிறுவப்பட்டு ஒருவாரம் கடந்திருக்கும் நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கதாகும் என்று ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கிறது. (ஜ-4)

## வெட்டுக்கிளிகள் ஓரளவு கட்டுக்குள் இருந்தாலும் தொடர்ந்தும் அவதானம் தேவை- விவசாயத் திணைக்களம்

(கொழும்பு)

நாட்டின் சில பாகங்களில் அடையாளம் காணப்பட்ட வெட்டுக்கிளிகளை ஓரளவு கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டாலும் அவதானம் தேவை என விவசாயத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வேதியியல் முறைமை உள்ளிட்ட ஏனைய சில முறைகள் குறித்து விவசாயிகளை தெளிவூட்டுவதன் மூலமே இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதாக விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யு.எம்.டபிள்யு வீரக்கோன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், குருநாகல் மாவத்தகம பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் முதல் முறையாக வெட்டுக்கிளிகள் அடையாளம் காணப்பட்டன.

குறித்த வெட்டுக்கிளிகள், கிளிநொச்சி, மாவனெல்லை, மாத்தறை, வலஸ்முல்ல முதலான பகுதிகளில் அடையாளம் காணப்பட்டதை அடுத்து, விவசாயத் திணைக்களம் இந்த விடயத்தில் அதிக அவதானம் செலுத்தியுள்ளது.

இந்நிலையில் வெட்டுக்கிளிகள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அது குறித்து தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ஜ -8)

## பொலிஸாருக்குப் பயந்து போதை உருண்டைகளை விழுங்கியவர் மரணம்

(கொழும்பு)

13 போதைப்பொருள் உருண்டைகளை விழுங்கிய சந்தேகநபர் ஒருவர் களுபோவில வைத்தியசாலையில் நேற்று முன்தினம் 10 ஆம் திகதி உயிரிழந்தார்.

பிலியந்தலை - மாகந்தன பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்ததாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி பண்டாரகம - பிலியந்தலை வீதியில் ஆட்டோவில் சென்ற ஒருவர் குறித்த நபருக்கு பொதி ஒன்றை வழங்கியதை வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அவதானித்துள்ளார்.

இதன்போது ஆட்டோ சாரதி கைது செய்யப்பட்டதுடன் உயிரிழந்த நபர் தம்வசம் வைத்திருந்த பொலித்தீன் உறையில் பொதி செய்யப்பட்டிருந்த போதைப்பொருள் உருண்டைகளை விழுங்கிய நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். உடற்கூற்று பரிசோதனைகளின் போது உயிரிழந்தவரின் வயிற்றிலிருந்து 13 போதைப் பொருள் உருண்டைகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ஜ-8)

## சுற்றுலாத்துறையைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கு நிவாரணம்

(கொழும்பு)

கொவிட்-19 பரவலையடுத்து பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத்துறையைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 117 பேருக்கு நிவாரணம் வழங்குவதற்கான திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலில், முதலீட்டு ஊக்குவிப்பு சிவில் விமான சேவைகள் அமைச்சர் நேற்று முன்தினம் அமைச்சரவையில் இதற்கான யோசனையை முன்வைத்திருந்த போதே அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய 2019 ஆம் ஆண்டு வரை இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல் துறையினர், போக்குவரத்து முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் சுற்றுலாத்துறை ஊழியர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு சம்பளம் வழங்கவும் 4 சதவீத வட்டிக்கு கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

## க.பொ.த. உயர்தரம், புலமைப்பரிசில்

# பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டிற்கு தகுதி வாய்ந்த தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்களை உள்வாங்கத் தீர்மானம்- பரீட்சைகள் ஆணையாளர்

(கொழும்பு)

**க.பொ.த.உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டிற்கு தகுதி வாய்ந்த தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்களும் உள்வாங்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித அறிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரச பல்கலைக்கழகங்கள், பட்டம் பெற்ற ஏராளமானவர்கள் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்களாக கடமையாற்றி வருகிறார்கள்.

அவர்களில் இருந்து பொருத்தமானவர்கள் வினாத்தாள் திருத்தப் பணிக்கு உள்ளீர்க்கப்படுவார்கள். க.பொ.த.உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டிற்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களில் 30 வீதமானவர்கள் அதில் பங்கேற்க தயக்கம் காட்டுவதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இரு பரீட்சை வினாத்தாள்களின் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களிற்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும். முன்னதாக சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல வினாத்தாள் மதிப்பீடுகள் முடிந்த பின்னர் ஆங்கில மொழிமூல வினாத்தாள் மதிப்பீடு நடைபெற்றது. இம்முறை மூன்று மொழிகளிலும் சம நேரத்தில் வினாத்தாள் மதிப்பீடு இடம் பெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# வவுனியாவுக்கு தேசிய ரீதியில் இரண்டாம் மூன்றாமிடங்கள்

(நெளுக்குளம்)

இளைஞர் செயற்பாட்டு வலைமையமைப்பு, உலக சுகாதார ஸ்தாபனம், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்துடன் இணைந்து சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'சிகரட் நிறுவனம் இளைஞர்களை ஏமாற்றும் விதம் தொடர்பில்' என்ற தலைப்பில் மாபெரும் ஆக்கபூர்வமான முகநூல் பதிவு தயாரிப்பு போட்டி ஒன்றை நடத்தியது.

இப்போட்டியில் வவுனியா இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளது.

தேசிய ரீதியில் நடைபெற்ற இப்போட்டியில் ஆக்கபூர்வமான முகநூல் பதிவை தயாரித்து முதல் இடத்தை கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிரவீனும் இரண்டாம், மூன்றாம் இடங்களை வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ரவீந்திரன் திலக்சன், சண்முகி கணேசலிங்கம் ஆகியோர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2-5-299)

# சீருடை வவுச்சர்களுக்கு பதிலாக துணி வழங்க தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வவுச்சர்களுக்கு பதிலாக சீருடைத் துணியினை மீளவும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கல்வியமைச்சர் டலஸ் அழகப் பெருமவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் விநியோக முகாமைத்துவ அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டுத் துணி உற்பத்தியாளர்களின் மூலம் இந்த பாடசாலை சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அத்துடன் இதற்காக 210 கோடி ரூபாய் செலவிடப்படவுள்ளது. கடந்த 1993 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணியே வழங்கப்பட்டு வந்த நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தினாலேயே பாடசாலை சீருடைக்கான வவுச்சர் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-8)

# மாறுபட்ட நேர அட்டவணைகள் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன

(கொழும்பு)

மாறுபட்ட நேர அட்டவணைகளில் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவுள்ளதன் காரணமாக நடைமுறை ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக அகில இலங்கை பாடசாலை வாகனப் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் நான்கு கட்டங்களாக திறக்கப்படவுள்ள நிலையில் மாறுபட்ட நேரங்களில் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது.

எனவே இவ்விடயம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாக அகில இலங்கை பாடசாலை வாகனப் போக்குவரத்து சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# சுகாதாரப்பிரிவின் விதிமுறைகளுக்கமையவே தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளலாம்

## மீறினால் சட்ட நடவடிக்கை என்கிறது பொலிஸ்

(கொழும்பு)

சுகாதாரப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமையவே பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை முன்னெடுக்க அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிதிகளை மீறி செயற்படுபவர்கள் தொடர்பில் பொலிஸார் அவதானமாக இருப்பதுடன், அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் தயாராக இருப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார விதிமுறைகள் தொடர்பில் சுகாதாரப் பிரிவு உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த விதி முறைகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திற்கும் சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. அதற்கமைய அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் ஆலோசனைவழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கமைய தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மற்றும் கூட்டங்கள் இடம்பெறுகின்றதா? என்பது தொடர்பில் பொலிஸார் அவதானமாக இருப்பதுடன் சுகாதாரப் பிரிவினரின் விதி முறைகளை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொலிஸார் தயாராக இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வீட்டிலிருந்தவாறான கல்விச் செயற்பாடுகளுக்கு புதிய டேட்டா பக்கேஜ் வசதிகள் அறிமுகம்

(கொழும்பு)

கொவிட் - 19 காரணமாக வீட்டிலிருந்து தொழில்புரிவோர் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு உதவும் வகையில் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு புதிய டேட்டா பக்கேஜ் வசதிகளை அறிமுகம் செய்துள்ளது.

கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த இரண்டரை மாதகாலமாக நாட்டின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் முடக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் தத்தமது வீடுகளில் இருந்தவாறே பணிபுரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதே போன்று இணையம் மற்றும் நவீன செயலிகள் ஊடாக மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இவற்றுக்கென நவீன தகவல் தொடர்பாடலுக்கான டேட்டா பக்கேஜ் வசதி பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது நாட்டின் செயற்பாடுகள் ஒவ்வொரு கட்டமாக மீண்டும் வழமைக்குத் திரும்பி வந்தாலும் இன்னும் வீட்டிலிருந்தவாறு வேலை செய்தல் மற்றும் கல்விச் செயற்பாடு என்பவற்றுக்கான தேவை காணப்படுகிறது.

எனவே இதற்குப் பயன்படுத்தப்படும் டேட்டா பக்கேஜ்களுக்கான செலவுகளைக் குறைக்கும் வகையில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கீழான சேவை வழங்குநர்கள் ஊடாக புதிய டேட்டா பக்கேஜ் வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதனூடாக வீட்டிலிருந்தவாறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் பயனடைய முடியுமென இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது. புதிய டேட்டா பக்கேஜ் சேவை வழங்கல் தொடர்பான விபரங்களை ஆணைக்குழுவின் http://www.trc.gov.lk/ என்ற இணையத்தள முகவரியில் பிரவேசிப்பதனூடாகப் பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4-8)

# இராசிபலன்

12.06.2020
வைகாசி 30, வெள்ளிக்கிழமை
சப்தமி பின்னிரவு: 1.13 மணிவரை
சதயம் முன்னிரவு: 9.24 மணிவரை
சுபநேரம்: 5.52-7.22 மணிவரை
இராகுகாலம்: 10.22-11.52 மணிவரை
சந்திராஷ்டமம்: பூசம், ஆயில்யம்

வளவன்


மேஷம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியமான நாள்.


மிதுனம்

கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பயணங்களால் பலனுண்டு.


கடகம்

மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.


சிம்மம்

புதிய நபர்கள் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.


கன்னி

எதிரிகள் உதிரியாகும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.


துலாம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


தனுசு

தெய்வ அனுகூலத்தால் சிறப்புகள் வந்து சேரலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


மகரம்

கல்யாணக் கனவுகள் நனவாகலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


கும்பம்

உறவினர்களின் சந்திப்பால் திடீர் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

புகழ்ச்சி நல்லவனை மேலும் நல்லவனாக்கும்.
கெட்டவனை மேலும் கெட்டவனாக்கும்

# இடுகம கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய மீதி ஆயிரத்து 376 மில்லியனாக அதிகரிப்பு



(கொழும்பு)

தனிப்பட்ட நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் இடுகம கொவிட் -19 சுகாதார சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 376 மில்லியனாக அதிகரித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 18 இலட்சத்து 13 ஆயிரத்து 688 ரூபாவை நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளது.

அதற்கான காசோலை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய நூலகம், ஆவண வாக்கல் சேவைகள் சபை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் இலங்கை செஸ் சம்மேளனம் 10 இலட்சம் ரூபாவையும் நிதியத்திற்காக ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

ஹசந்த குருகே ஒரு இலட்சம் ரூபாவையும் பஸ்னாகொட நீர்த்தேக்க திட்டம் 28 ஆயிரத்து 739 ரூபாவையும் அன்பளிப்பு செய்தன.

இடுகம கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 376 மில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்பு செய்து வருகின்றனர்.

காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் **www.itukama.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது **#207#** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும்.

076 070 0700 / 011 232 0880 / 011 235 4340/ 011 242 4012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

# வாய்த்தர்க்கம் கைகலப்பானது; ஆட்டோச்சாரதி பரிதாபமாக பலி

(கொழும்பு)

மிரிஹான பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 53 வயதான ஆட்டோ சாரதியொருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கை சுய தொழிலாளர் தேசிய ஆட்டோச் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்த்தன என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மிரிஹான பகுதியிலுள்ள வாகனங்களை குத்தகைக்கு விடும் நிறுவனமொன்றில், நேற்று முன்தினம் ஆட்டோ ஒன்றை விடுவிப்பது தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இத் தாக்குதலின் போதே குறித்த நபர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# மரண அறிவித்தல்

## அமரர். இறமேந்து தேவசகாயம்

(ஓய்வு நிலை ஆசிரியர்)



யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கனடா மிசிசாக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட இறமேந்து தேவசகாயம் (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்கள் 10.06.2020 புதன்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இறமேந்து, கிறிஸ்ரீனாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இறப்பியேல், ஞானசவுந்தரி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி ஆகத்தம்மா தேவசகாயம் (ஓய்வுநிலை ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், யோகராசா, யோகராணி, யோகநாதன், யோகமதி, யோகநேசன், யோகா, யோதினி, யோகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தி, பீற்றர், சிறானி காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் உதயா, இராஜரட்ணம், அன்ரனி, இதயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், றெனி, நிலாந்தி, கெனி, டொறின், ஜோண், கொலின், மொறின், ஷெறின், நெவின், போல், கெவின் எறிக், றுபினா, யூலினா, எவ்லின், ஜோலின், றொனால்ட், டெய்னா, அன்று, லோறா, டெறின், யசி, ரனிஷா, லசீஷா, ஜனோஷா ஆகியோரின் அன்புப் பேரனும் , ஆஷ்லி, ஜஷன், எலெய்னா, ஜெனிக்ஷா, ஜெஷானா, வேந்தன், எல்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13.06.2020 சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கனடா புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்: குடும்பத்தினர். (2997)

தொடர்புகட்கு : டொறின் (பேத்தி-இலங்கை): 0094 766 416 811

# நுணாவில், மீசாலை ஆகிய இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்க வேண்டும்

## நகரசபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இரண்டு தாய்-சேய் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவை இருப்பதாக சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினர் க.வேலாயுத பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்று சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மீசாலை, நுணாவில் மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகிய மூன்று இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்க வேண்டும்.

ஏற்கனவே சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தாய்-சேய் நிலையம் இயங்கி வருவதால் நுணாவில் மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மூன்று இடங்களிலும் சேவை இடம்பெற்றால் தான் மக்களுக்கு இலகுவாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

நுணாவில் பகுதியில் சனசமூக நிலையத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையம் சனசமூக நிலையத்தில் நிலவுகின்ற குறைபாடுகள் காரணமாக குறித்த சேவைப் பிரிவும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனால் மருத்துவ ஆலோசனை மற்றும் பரிசோதனைக்காக வரும் தாய்மார் மற்றும் குழந்தைகள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருப்பதாகவும் நகரசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-5-30)

# மஹோற்சவம் இல்லை அபிஷேகம் மட்டும்

(குப்பிழான்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலைமையால் குப்பிழான் சொக்க வளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இவ் வருடம் நடைபெறாது என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

மஹோற்சவ ஆரம்ப நாளான நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையான 12 தினங்களும் முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை விசேட அபிஷேக, ஆராதனைகள் மாத்திரம் நடைபெறும்.

இவ் அபிஷேகம் சுகாதார நடைமுறைகளுக்கும் சட்ட நடைமுறைகளுக்கும் அமைய சமூக இடைவெளியைப் பின்பற்றி இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (2-5-18)

# தேசிய யோகாதினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இந்திய துணைத்தூதரகத்தின் அனுசரணையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு யோகா கலையை மாணவர்களுக்கிடையில் சென்றடையச் செய்யும் முகமாக கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இதில் கட்டுரைகள் ஏ4 தாள்களில், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் 2000 சொற்களில் எழுதப்பட வேண்டும்.

1.யோகா கலையின் பயன்பாடு"

2."யோகாகலை மனித உடம்பமைப்பு மற்றும் மனநிலையில் ஏற்படுத்துகின்ற மாற்றம்"

3.தியானத்தின் நன்மைகள்" ஆகிய தலைப்புக்களில் எழுதப்பட வேண்டும்.

ஓவியங்கள் ஏ4 தாள்களில் யோகாவின் முக்கிய அம்சங்கள் மற்றும் பயன்பாடுகளை பிரதிபலிக்கக்கூடியதாக வர்ண பென்சில் மூலம் வரையப்பட வேண்டும்.

மேற்படி போட்டியில் பங்குபற்ற ஆர்வமுடைய மாணவர்களின் ஆக்கங்களை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறும் மேலதிக தகவலினை 021 205 4105 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (2-5)

# வாகன உரிமையாளர்களுக்கு சலுகை வழங்கத் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையினர் கொவிட்-19 சூழ்நிலையால் வாகன உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்பு காரணமாக சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்திற்கான வாடகை மற்றும் ஆட்டோக்களுக்கான இட வாடகை அறவீட்டில் சில விலக்கழிப்புக்களைச் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

11/06 வியாழக்கிழமை சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் சபையினரால் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த வகையில் தனியார் சிற்றூர்திகளின் சாவகச்சேரி பேருந்து தரிப்பு நிலையத்திற்கான வாடகையை இரண்டு மாத காலத்திற்கும் ஆட்டோக்களுக்கான இட வாடகையை மூன்று மாத காலத்திற்கும் விலக்கழித்துத்துள்ளது.

அத்துடன் சாவகச்சேரி பொதுச் சந்தை குத்தகைதாரரிடமும் கொரோனா சூழ்நிலை காரணமாக சந்தை மூடிய காலப்பகுதியில் அதற்கான வாடகையை நாள் அடிப்படையில் கணித்து விலக்கழிக்கவுள்ளதாக நகர சபையினர் தெரிவித்துள்ளனர். (2-5-30)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கீரிமலை உதவும் கரங்களின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் கீரிமலை நகுலேஸ்வரா முன்பள்ளி மண்டபத்தில் இரத்ததான முகாம் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு குருதிக் கொடையாளர்கள் இரத்த தானம் வழங்க முன்வர வேண்டுமென ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-5-18)

# நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் சாரதிகளின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு ஓய்வு தேவைப்பட்டால் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே ஓய்வு எடுக்க வேண்டுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெடுஞ்சாலைகளில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் சிலர் வீதியோரத்தில் வாகனத்தை நிறுத்தி ஓய்வெடுக்கின்றனர்.

இதனால் போக்குவரத்தில் சிக்கல்கள் ஏற்படுகின்றன எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சாரதிகள் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்தி ஓய்வு எடுக்க முடியும் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே சாரதிகள் விடயத்தைப் புரிந்து கொண்டு அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனம் செலுத்த வேண்டுமென அதிவேக நெடுஞ்சாலை மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (2-5-114)

# கணனி விஞ்ஞானத்துறை புதிய துறையாகப் பிரகடனம்; அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலால் குழப்பநிலை

## அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு பல நூறு பட்டதாரிகள் வெளியேறியுள்ள நிலையில், கணனி விஞ்ஞானத் துறையைப் புதிய துறையாகப் பிரகடனப்படுத்தும் உயர் கல்வி அமைச்சின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலால் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி, வெளியிடப்பட்ட 2163/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அடிப்படையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் 17 ஆவது புதிய துறையாக மொழி பெயர்ப்புக் கற்கைகள் துறையும், விஞ்ஞான பீடத்தில் 7 ஆவது கற்கைத் துறையான கடற்றொழில் துறையும், 8 ஆவது கற்கைத் துறையாக கணனி விஞ்ஞானத் துறை சேர்க்கப்படுவதாகவும் கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சகல பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களுக்கும் சகல வளாகங்களின் முதல்வர்களுக்கும் சகல நிலையங்களினதும் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப் பட்டிருந்தது.

ஏற்கனவே, 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி அப்போதைய கல்வி அமைச்சரினால் வெளியிடப்பட்ட 1435/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படியும், 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி அப்போதைய உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் டபிள்யூ. ஏ. விஸ்வ வர்ணபாலவினால் வெளியிடப்பட்ட 1518/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படியும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் இருந்த 6 துறைகளில் 3 ஆவதாக கணனி விஞ்ஞானத்துறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

தற்போது 7 ஆவதாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட கடற்றொழில் துறையும், 8 ஆவது கற்கைத் துறையாக கணனி விஞ்ஞானத்துறை புதிய துறையாக அறிவிக்கப்பட்டிருப்பது விஞ்ஞான பீடத்தில் குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளது.

இதுபற்றி ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக உயர்கல்வி அமைச்சுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 120 |
| தக்காளி | 160 | 160 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 | 80 |
| கோவா | 140 | 120 | 160 | 160 |
| கரட் | 120 | 200 | 180 | 200 |
| பூசணி | 50 | 40 | 80 | 50 |
| புடோல் | 60 | 70 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 70 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 260 | 220 | 280 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 180 | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 130 | 110 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 180 | 180 | 200 |
| பீற்றூட் | 120 | 100 | 120 | 160 |
| கறிமிளகாய் | 100 | 70 | 180 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 240 | 240 |
| போஞ்சி | 250 | 220 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 140 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 40 | 40 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 280 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 50 | 100 |

## அமெரிக்காவுக்கு விசுவாசமாகச் செயற்படும் அரசு

# இலங்.ஐந்து வருடங்களுக்குள் அமெரிக்க மாநிலமாகி விடுமோ?

### முஜிபுர் அச்சம்

(கொழும்பு)

**இலங்கை இன்னும் ஐந்து வருடங்களுக்குள் அமெரிக்காவின் மாநிலமாக மாறிவிடுமோ? என அஞ்சத் தோன்றுகிறது. ஏனெனில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கர்களுக்கு விசுவாசமாக செயற்படுகின்றார். அந்நாட்டின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்வதையே நோக்காகக்கொண்டு செயற்படுகின்றார் என கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருமான முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டினார்.**



கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் கடுமையான முறையில் கட்டுப்படுத்தியமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் இராணுவத்தை விட்டுவிட்டு அமெரிக்காவுக்குச் சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் நாடு திரும்பினார். தனது சகோதரனுக்கு தெரியாமலேயே அமெரிக்காவுடன் மிலேனியம் சலஞ்சஸ் ஒப்பந்தத்தை இரகசியமாக செய்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மிலேனியம் சலஞ்சஸ் திட்டம் இலங்கைக்கு ஆபத்தானது அதனை இல்லாமல் செய்வேன் என கோட்டாபயவும் பொதுஜன பெரமுனவினரும் கூறி வந்தனர். ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் அவர்களின் பேச்சு மாறிவிட்டது. மிலேனியம் சலஞ்சஸ் திட்டத்தில் பல நன்மைகள் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

அதேபோல முன்னிலை சோசலிசக் கட்சியினர் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும் நீதிமன்ற தடையுத்தரவொன்றை அரசாங்கம் பெற்றுக்கொண்டது. இந்நிலையில் தடையையும் மீறி ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். அமெரிக்காவில் கறுப்பின பிரஜையொருவர் அந்நாட்டு பொலிஸாரால் கொல்லப்பட்டமையை எதிர்த்தே கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆக அநீதிக்கெதிராக குரல் எழுப்புவதற்கு நாட்டில் அனுமதி மறுக்கப்படுகின்றமை தெளிவாகிறது.

அத்தோடு அமெரிக்காவின் அராஜகங்களுக்கு இந்த அரசாங்கம் ஆதரவளிப்பதையும் ஒத்துழைப்பு வழங்குவதையும் காண்கிறோம். இது இலங்கையின் எதிர்காலத்திற்கு மிக மோசமான செய்தியை சொல்கிறது.

முன்னர் ஐக்கிய தேசியக் கட்சிதான் அமெரிக்க ஆதரவு போக்கை கடைப்பிடிப்பதாக குற்றச்சாட்டுகளை ராஜபக்ஷக்களும் அவர்கள் சார்ந்தோர்களும் தெரிவித்து வந்தனர். இன்று அவர்களும் அமெரிக்க சார்பானவர்கள் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அமெரிக்காவில் கறுப்பின பிரஜையொருவருக்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட அராஜகம் கண்டிக்கத்தக்கவை. அதேபோன்று இந்நாட்டிலும் அராஜகத்துக்கு எதிராக குரல் எழுப்பியவர்களை பொலிஸார் மிக மோசமாக நடத்தியதையும் கண்டிக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பலம் கிடைத்து விட்டது என்று பேசாமல் அதைப் பொதுத் தேர்தலில் காட்டுங்கள்

### செஹான் சேமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியினர். தங்களுக்கு பலம் கிடைத்து விட்டதாக தற்போது கூறிக் கொண்டு வருகிறார்கள் என்றும் இப்பலத்தை பொதுத் தேர்தல் ஊடாகக் காண்பியுங்கள் என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உங்கள் பலத்தை பொதுத் தேர்தல் ஊடாக காண்பியுங்கள் என நாம் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறோம் என்றும் பொதுத் தேர்தலுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டும். அப்போது மட்டுமே, மக்களால் நிராகரிக்கப்பட்ட எத்தனை பேர் அந்த கூட்டணியில் உள்ளார்கள் என்பதை தெரிந்து கொள்ள முடியும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சாரதி அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரங்களை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வேரஹெர பிரதான அலுவலகம் மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள அலுவலகங்களில் சாரதி அனுமதிப்பத்திரம் வெளியிடுதல் உட்பட சேவைகள் துரிதப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் சுமித் அலஹகோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

வேரஹெர மற்றும் கம்பஹா அலுவலகங்களில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான கோரிக்கை அதிகரித்த நிலையில் அந்த நடவடிக்கைகளை வேகப்படுத்துவதற்காக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய மேலதிக நேர கடமைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தொடர்ந்து மட்டுப்படுத்தி சேவையை வழங்குவதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ஜ-8)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 75 செவ் 8 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா. துணை பத்திரிகை ஆசிரியர்.<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/7179 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 23 சூரி.செவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8188 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: செவ் 10 இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சாரதி (தனியார்)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/7183 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: செவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் அல்லது வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/8200 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 44 செவ் 7 இல் உயரம்: 171cm<br>தகைமை/தொழில்: HNDA, MBA, CIMA, Accounting Executive Officer<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: B/7184 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த:<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8223 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: சூரி. செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: B.Sc, MBA. Programme Assistant (Gov)<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு PR உள்ள பெண்கள்<br>தொ.இ: B/7187 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மீருகசீரிடம் 4<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச கணக்காளர்.<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் சைவ போசனம் மட்டும்.<br>தொ.இ: G/8224 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இயற்கைக்கான தருணமும் இயைவாக்கம் அடையவேண்டிய சூழலும்

பா.ராஜ்குமார்

(நேற்றைய தொடர்ச்சி...)

தற்போது இத்தகைய இடங்கள், கட்டடங்கள் நிறைந்த பகுதியாக மாற்றமடைந்துள்ளன. இதன்மூலம் தொலைந்தவை இயற்கை சூழல்தொகுதி மட்டுமன்றி சிறுவர்களின் இயற்கையுடன் ஒன்றித்த வாழ்க்கையும் தான்.

இதேபோன்று அரச சேவையில் பல்வேறு நியமனங்கள் வழங்கப்பட்டன. புதிய நியமனத்தின் போதும் இடம் மாற்றத்தின் போதும் தாங்கள் வாழும் எம்மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லத்தொடங்கினர். மேலும் வீட்டில் அநேகமாக கணவன்-மனைவி இருவரும் வேலைக்குச் செல்லுகின்ற பண்புகள் இவ்வாறான நடவடிக்கைகளாலும் பிள்ளைகள் புலம்பெயர்ந்ததாலும் பல பெற்றோர்கள் பிள்ளைகளின் பராமரிப்பற்று வாழும் சூழல் ஏற்படத்தொடங்கியது. இதனால் வீட்டு பராமரிப்பு என்பது சவாலான விடயமாக மாறியபோது வீட்டில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. அதாவது அழகிய வேலிகள் மதில்களாக மாற்றம் பெற்றன.

இதனால் செம்பகத்தின் உணவு கிடைப்பனவு சவாலான விடயமாக மாறியது. மரங்கள் வேலிகளில் உள்ள எறும்புகள், பூச்சிகள், மயிர்க்கொட்டிகளை உணவாகக் கொள்ளும் செம்பகம் அழிவடைந்து செல்லும் இனமாக மாறியுள்ளது. கட்டுமானங்களுக்காக பல்வேறு பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டன. அதாவது பழ மரங்களான கொய்யா, மா, மாதுளை போன்றன அழிக்கப்பட்ட போது இவை நோக்கி வரும் வதிவிடப்பறவைகளான துக்கணாங்குருவி, சிட்டுக் குருவி, மைனா புளுனி, குயில், சோலைப்பாடி, கிளி எண்ணிக்கையும் குறைவடையத் தொடங்குகின்றன. இப்பறவைகளுக்கான உணவு ஆரம்பத்தில் வீட்டுச் சூழல் தொகுதியிலேயே கிடத்தது.

ஆனால் இன்று இவற்றுக்கான உணவைத் தரும் பழ மரங்களை நாம் அழித்துவிட்டோம். காகம் போன்ற பறவைகளும் ஏனைய பறவைகளும் உணவுக்காகவும் நீருக்காகவும் அலைகின்றன. நாங்கள் தற்போது துயில் விட்டு எழுகின்றபோது பறவைகளின் ஒலி கேட்பதில்லை. வீட்டிலிருந்து நீர் இலகுவாக எடுப்பதற்கு நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டன. ஆதனால் பல கிணறுகள் ஓய்வூதியம் பெற்றன. இவற்றைவிட பல்வேறு வீடுகளின் முற்றத்தின் தரைக்கு கொங்கிறீட் போடப்பட்டன. இதனால் நிலத்தடி நீர் செல்வதற்கான தன்மை இல்லாமல் போகின்றது. கிராமங்களில் பல்வேறு பகுதிகளும் கட்டுமான அபிவிருத்தி நோக்கி நகர்ந்து செல்கின்றன. இதனால் இயற்கையின் இயல்பான இயக்கத்திற்கு நாம் பிரதான தடையை ஏற்படுத்தியுள்ளோம்.

விவசாய நிலங்களில் அதிக விளைச்சலுக்காக கிருமிநாசினி மற்றும் இரசாயனப் பசளைகள் கட்டுப்பாடற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் மருந்துப் பாவனை கொண்ட மரக்கறிகளையே தினமும் நாம் உட்கொள்கின்றோம். இரசாயனப்பசளை பயன்பாட்டால் நிலத்தடி நீர் மாசுபடுவதுடன் நிலமும் தரமிழக்கப்பட்டு வருகின்றன. இதனால் இன்று புற்றுநோய், நீரிழிவு, சிறுநீரக நோய், நுரையீரல் மற்றும் இதய நோய் எனப் பல்வேறு நோய்கள் அதிகரித்துள்ளன.

ஆரம்பத்தில் யாழ்.மாவட்டத்தின் நகரப்பகுதியில் தனியார் வைத்திய நிலையம் ஒன்று மட்டும் இருந்தது. ஆனால் இன்று கிராமங்கள் தோறும் பல இருப்பதுடன் இணைய வழியிலான பதிவுகள், சலுகைகள் வழங்கல் என்பன விற்பனை நோக்கில் செல்கின்றன. புலம்பெயர் உறவுகளின் வருகையும் உலகமயமாக்கல் போக்குகளுக்கு எமது மாவட்டமும் ஆட்கொள்ளப்பட்டமையாலும் இன்று எம்து சமூகம் நவீன வாழ்வியலின் வலைக்குள் புதைந்து விட்டது. புதிய தொடுகை கைத்தொலைபேசிகள் சமூக வலைத் தளங்களின் பயன்பாடுகளில் அதிகமாக மூழ்கியமையால் சமூகப் பொறுப்பும் வாழ்க்கைப்பொறுப்பும் உடைந்து வீட்டு இயற்கை சூழலின் மீதான கவனமும் முற்றாகவே குறைவடைந்துள்ளது. அதுமட்டுமன்றி மக்கள் ஆரோக்கியமாக இருப்பதில்லை. ஒருவருடன் ஒருவர் மனம் விட்டு கதைப்பதில்லை. பாரிய சமூக இடைவெளி அதிகரித்து வருகின்றது.

ஆரம்பத்தில் எமது பெற்றோர்கள் நாம் சிறிய குழந்தைகளாக இருக்கும்போது எமக்கு உணவு ஊட்டும் போது இயற்கையான விடயங்களைக் காண்பித்து உணவு ஊட்டுவார்கள். அதாவது நிலவு, சூரியன், பறவைகள் போன்ற பல்வேறு விடயங்களை காண்பித்து உணவு ஊட்டினார்கள். இதனால் சிறு வயதிலேயே இயற்கை பற்றிய எண்ணம் ஊட்டப்பட்டு வந்தன. ஆனால் தற்போது முகநூலில் வரும் படங்கள், சினிமா போன்றவற்றை காட்டியே உணவு ஊட்டுகின்றார்கள். வீட்டுச் சூழல் தொகுதியில் பழமரங்களுக்கு மேலாக பல்வேறு மூலிகை தாவரங்களும் எமது மாவட்ட மக்களால் வளர்க்கப்பட்டு வந்தன. துளசி, கற்பூரவள்ளி, குறிஞ்சா, சண்டி, தூதுவளை, தேசி என்பன மூலிகை தாவரங்களாக வளர்க்கப்பட்டு வந்தன. இவற்றின் மூலம் எமது மக்கள் வீடுகளில் இயற்கை முறை மூலம் மருத்துவம் செய்து ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். வீட்டுச் சுற்றாடலே எமக்கு பொழுதுபோக்கினையும் மன ஆரோக்கியத்தையும் தந்ததுடன் பல்வேறு உயிரினங்களின் வாழ்க்கையையும் நிலைபெறச் செய்தன. ஆனால் இவ்வாறான பலவற்றை நாம் இழந்துள்ளோம்.

### கொரோனாவும் வீட்டின் இயற்கை சூழல் தொகுதியும்

2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சீனாவில் ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று இன்று உலகமெங்கும் பரவலடைந்து தற்போது இதன் தாக்கம் பல்வேறு நாடுகளில் அதிகரித்து வருகிறது. 19 நாடுகளில் பொது முடக்கம் **(Lockdown)** நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கையில்




1700 இற்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 11 மரணங்கள் இடம்பெற்றுள்ளன. கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக இலங்கையிலும் பொது முடக்கமும் ஊரடங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதனூடாக மக்கள் வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். இலங்கையில் இவற்றின் பாதிப்பு குறைவாகக் காணப்பட்டாலும் பொது முடக்கமும் ஊரடங்கு நடைமுறையும் எல்லா மக்களையும் வீடுகளில் முடங்க வைத்தன. சுமார் நான்கு மாதங்களுக்கு மேலாக இது தொடர்கின்றது. நான்கு மாதங்களுக்கு மேலாக இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் தொடர்ச்சியாக பல நாட்கள் வீட்டில் கழிக்க வேண்டியிருந்ததனால் ஒவ்வொருவரும் வீட்டுச்சூழல் தொகுதி பற்றி சிந்திக்கத் தொடங்கினர். கொரோனா அபாயம் தொடர்ந்து காணப்படுவதனால் கிராம சுய நிரந்தர தனிமையாக்கமும் வீட்டு வாழ்க்கையுமே நிரந்தரமானது எனும் சிந்தனை எல்லோர் மனதிலும் எழுச்சி பெற்றன. பொதுமுடக்க வேளையில் வீட்டிலிருந்த மக்கள் தங்கள் வீட்டுச்சூழல் தொகுதியை விருத்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினர். ஏனெனில் இக்காலத்தில் ஆரோக்கியமான காற்றை வீட்டிலிருந்து சுவாசித்தார்கள். கிணற்றிலிருந்து பெற்ற குடிநீரையே பருகினார்கள். ஒருவரும் போத்தல் குடிநீரைப் பயன்படுத்தவில்லை. எல்லோரும் வீட்டுத்தோட்ட செய்கையில் ஈடுபட்டார்கள், ஈடுபடுகிறார்கள், மரம் நடுகையில் ஈடுபடுகிறார்கள், பொதுமுடக்க வேளையில் ஆரோக்கியமான உணவை மூன்று வேளையும் சமைத்து உண்டார்கள்.

இக்காலத்தில் ஒருவருக்கும் பாரிய நோய்கள் ஏற்படவில்லை, வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகக் காணப்பட்டது. இறப்புக்கள் குறைவடைந்தன, விபத்துக்களும், ஏனைய சிறு சிறு பாதிப்புக்களும் முற்றாக குறைவடைந்தன. எவ்வாறு இது சாத்தியமானது என்பது ஆச்சரியத்திற்குரியது. பயிர்களுக்கு பசளையோ கிருமிநாசினியோ பயன்படுத்தப்படவில்லை. மக்கள் ஆரோக்கியமான மரக்கறிகளை உண்டார்கள். வீட்டில் கிடைக்கும் மூலிகைகளை மருந்தாகப் பாவிக்கத் தொடங்கினர். இரசம், மல்லித் தேநீர், வேப்பம் பட்டை, குறி ஞ்சா, பாற்கஞ்சி, தூதுவளை, மஞ்சள் என பாரம்பரிய மருத்துவ உணவுகளை நுகர்ந்தார்கள். புதிது புதிதாக உருவாகிய பல நோய்கள் முற்றாகக் குறைவடைந்துள்ளன. எல்லோரும் முன்னருடன் ஒப்பிடுமிடத்து ஒரு வகையான மன அமைதியை அடைந்தனர். உண்மையாக கொரோனாத் தொற்று காரணமாக உருவாகிய பாதுகாப்பு முறை எங்களுக்கு கற்றுத்தந்த பாடம் என்ன? கொரோனாத் தொற்றிலிருந்து எங்களைப் பாதுகாக்க உதவியது மட்டுமன்றி மனிதன் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலைகளையும் வலையமைப்பில் இருப்பதற்கும் அப்பால் இயற்கையுடன் ஒன்றிணைத்திருப்பது பல்வேறு நோய்களிலிருந்து எம்மை பாதுகாப்பதற்கான நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் அதிகரித்து எமது நிலையான வாழ்விற்கான மன அமைதியையும் ஆரோக்கியத்தையும் தரும் என்ற வகையில் வீட்டுச்சூழல் தொகுதியை விருத்தி செய்தலும் அதனை நிலையாகப் பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம. எனவே எமக்கு கற்றுத் தந்த பாடம் வீடுகளில் அழிந்தும் அழியாமலும் எஞ்சியிருக்கும் சூழல் தொகுதியே எமக்கு ஆறுதலைத் தந்தது என்றால் இதனை நிலையான மேலும் விருத்தி செய்தால் எவ்வாறான பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற செய்தியையும் நாம் இயற்கை அன்னைக்கு எப்போதும் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்பதையும் இயற்கையுடனான ஒன்றித்த வாழ்வே எல்லாவற்றிலிருந்தும் எங்களைப் பாதுகாக்க உதவும் என்பதையும் கற்றுத் தந்திருக்கின்றன.

### சூழல் பாதுகாப்பும் இயற்கையுடன் ஒன்றிணைந்த சமூகத்தை கட்டியெழுப்புதலும்

கொரோனாத் தொற்றுக்கு முன்னர் உலகின் பல்வேறு சூழல் தொகுதிகள் மனிதனின் பல்வேறு நடவடிக்கைகளால் பாரிய அழிவையும் அச்சுறுத்தலையும் எதிர்கொண்டன. காடழிவுகள், வன விலங்குகளை வேட்டையாடுதல், விலங்கினங்களின் உறுப்புக்களை விற்றல், வனவிலங்குப் பகுதிகளை ஆக்கிரமித்தல், நகரமயமாக்கல் செயற்பாடுகள் என்பன அதிகரித்தன.

திண்ம,திரவக் கழிவுகளின் உற்பத்தி, கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெறியேறும் புகைகள், வாகனப் பயன்பாடு அதிகரித்தமையால் வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வாயுக்கள் அதிகரித்தன. நாடுகளினதும் பல்வேறு அரசாங்கங்களினதும் நிறுவனங்களினதும் மக்களினதும் செயற்பாடுகள் எல்லைமீறிச் சென்றன. இதன் விளைவாக இயற்கையின் கோரத்தாண்டவத்திற்கு உலகின் பல்வேறு இடங்கள் ஆட்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு அனர்த்த வேளையிலும் இயற்கை எமக்குச் சொல்லும் பாடம் நாம் இயற்கையை இயங்கவிடவேண்டும் என்பதுதான். இதை உணராமல் விட்டமை அண்மைய பாரிய அழிவுகளான அமேசான் காட்டுத் தீ, அவுஸ்திரேலியா காட்டுத்தீ மற்றும் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து இந்தியா, இலங்கை என பரவலடையும் வெட்டுக்கிளிகளின் தாக்கம் **(Locust infestation)** போன்றவற்றைக் குறிப்பிடலாம். அபிவிருத்தி அடைந்த



நாடாகிய அவுஸ்திரேலியாவால் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு மாத காலம் சென்றது. பல உயிரினங்கள் அழிந்துவிட்டன. மனித நடவடிக்கையின் விளைவாக ஏற்பட்ட காலநிலை மாற்றமே இதற்குக் காரணமாகும்.

எனவே இயற்கை வளங்கள் உயிர்ப் பல்வகைமையின் தாயகமாக எமது சாத்தியமான காலநிலை மாற்றத்திற்கும் சூழல் சமநிலையைப் பேணவும் உணவு, மருந்து என்பவற்றுடன் பொழுதுபோக்கையும் எமக்கு தந்து நிலையான மானிட வாழ்வின் விருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றன.

### யாழ்ப்பாண மாவட்டத்தின் இயற்கை வளங்கள்

எமது யாழ்ப்பாண மாவட்டம் சிறப்பான இயற்கை வளத்தைக் கொண்டுள்ளன. தொண்டைமானாறு, உப்பாறு மற்றும் யர்ழ்ப்பாண கடனீரேரிகளையும் தீவகப் பகுதிகளிலும் வடமராட்சி கிழக்கு மற்றும் மாவட்டத்தின் கடனீரேரிகளுடன் இணைவாக பாரிய கண்டல்களும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் பாரிய மணல்மேடுகளும் சவுக்கம் காடுகள், அழகிய கடற்கரைகள் ஏனைய இயற்கைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும் காணப்படுகின்றன. இவற்றில் கடனீரேரிகளும் கண்டல் தாவரங்களும் சதுப்பு நிலங்களும் உள்ளூர் வதிவிடப்பறவைகள் மற்றும் குடிபெயர் பறவைகள் போன்றவற்றின் பிரதான வாழ்விடங்களாக அமைவதுடன் பெருமளவான கடல் வாழ் உயிரினங்களின் புகழிடமாகவும் அமைகின்றன.

எமது மாவட்டத்திற்கு பல ஆயிரம் மைல்கள் கடந்து இந்தியாவினூடாக குடிபெயர் பறவைகள் பல நூறு வருடங்களாக வருகை தருகின்றன. இவ்வாறு வருகை தரும் பறவைகள் புரட்டாதி மாதத்திலிருந்து அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் வரை இங்கேயே தங்குகின்றன.

(தொடரும்.....)




# தாய்மையின் சக்தி

ஒரு மலைப் பிரதேசத்தில் மலை உச்சியில் ஓர் இனத்தாரும் அடிவாரத்தில் இன்னொரு இனத்தாரும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தாருக்கும் எப்போதும் பகை.

ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.

சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலைமேல் இருந்த சமூகத்தினரிடம் சமாதானமாகப் போய் பேசினால் குழந்தையை மீட்டு வந்து விட சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர்.

இளைஞர்கள் சிலர் உடனே முன்வந்தார்கள். அவர்கள் கடினமான வேலைகள் செய்து பழகியவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடாமுயற்சியுடன் முடிக்கும் மனப்போக்கைக் கொண்டவர்கள். ஊர்ப் பெரியவர்களும் இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் சிறந்தவர்கள் என்று அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள்.

இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்களால் அப்படி ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. விடாமுயற்சியுடன் அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். களைத்துப் போனால் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள்.

அவள் அருகில் வந்தவுடன் "நாங்கள் ஏற சிரமப்பட்ட மலையை நீ ஏறிச் சென்றுவிட்டாயே! எப்படி?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி "இது உங்கள் குழந்தை இல்லை. என் குழந்தை. அதுதான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள்.

## விடுகதைகளும் விடைகளும்

• எல்லா வித்தையும் தெரிந்தவன். தெரியாதவன் போல் பாவனை செய்கிறான். அவன் யார்?

**கோமாளி**

• ஆடி ஆடி நடப்பான். அரங்கதிர வைப்பான். அவன் யார்?

**யானை**

• எங்க வீட்டுத் தோட்டத்திலே தொங்குதே ஏகப்பட்ட பச்சைப் பாம்புகள். அது என்ன?

**புடோலங்காய்**

• "ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது" அவர்கள் யார்?

**எறும்புக் கூட்டம்**

• ஆனை விரும்பும் சேனை விரும்பும் அடித்தால் வலிக்கும் கடித்தால் சுவைக்கும் அது என்ன ?

**கரும்பு**


• தாடிக்காரன். மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?

**தேங்காய்**

• அள்ள அள்ளக் குறையாது. ஆனால் குடிக்க உதவாது. அது என்ன?

**கடல்நீர்**

## வரைந்து பழகுவோம்



## நிறந்தீட்டுங்கள்



# அமைதியான நாடு; 77 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்ட இலங்கை

## ஐஸ்லாந்து தொடர்ந்தும் முதலிடத்தில்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டிற்கான உலக சமாதான சுட்டியில் இலங்கை 77 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இந்த சுட்டியில் இலங்கை 72 ஆவது இடத்தை பெற்றிருந்தது. எவ்வாறாயினும் இம்முறை இலங்கை 5 இடங்களால் பின்தள்ளப்பட்டுள்ளது.

இம்முறையும் உலகின் அமைதியான நாடாக ஐஸ்லாந்து தெரிவாகியுள்ளது. நியூசிலாந்து, போர்த்துக்கல், ஆஸ்திரியா, டென்மார்க், கனடா, சிங்கப்பூர், செக்குடியரசு, ஜப்பான் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் உலக சமாதான சுட்டியில் முதல் 10 இடங்களிலுள்ளன.

தெற்காசிய நாடுகளில் இந்தியாவுக்கு 139 ஆவது இடம் கிடைத்துள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்தியா 2 இடங்கள் முன்னேறியுள்ளது. உலகில் மோதல்கள் இடம்பெறும் நாடுகளில் லிபியா, சோமாலியா, ஏமன், தென் சூடான், ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன.

இதன்பிரகாரம் 81 நாடுகளில் அமைதி நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, 80 நாடுகளில் அமைதி சீர்குலைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-8)

# துறைமுக நகர கட்டுமானப்பணிகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்புத் துறைமுக நகர கட்டுமானப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக தமது பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்புத் துறைமுக நகரத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் பணியிடத்திற்குள் அனுமதிக்கப்பட முன்பதாக இரண்டு தடவை பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்றதும் அவர்கள் தனியான இடமொன்றில் தங்க வைக்கப்பட்டு பணியிடத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# அஞ்சல்துறை பணியாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்க தீர்மானம்

## சனிக்கிழமைகளில் தற்காலிக விடுமுறை

(கொழும்பு)

அஞ்சல்துறை பணியாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்களை தற்காலிகமாக மூடுவதற்கும் மேலதிக கொடுப்பனவை வழங்குவதை தவிர்ப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்திற்கு ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்கத்தினர் முன்னதாக எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில் நாட்டில் நிலவும் பாரிய நிதி மற்றும் பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியில், செலவுகளை மட்டுப்படுத்தாவிட்டால், நாட்டை முன்கொண்டு செல்வதில் சிக்கல் நிலை ஏற்படும் என்பதனால், ஏதாவது ஒரு வகையில் பங்களிப்பு செய்யுமாறு அஞ்சல் துறையினரிடம் கோரப்பட்டது.

எனினும், சனிக்கிழமைகளில் பணியாற்றுதல், மேலதிக கொடுப்பனவை வழங்க வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளையும் அவர்கள் முன்வைத்தனர். குறித்த இரண்டு கோரிக்கைகளில் ஒன்றைக் கைவிட்டு சனிக்கிழமைகளில் அஞ்சல் அலுவலகங்களுக்கு விடுமுறையையும் ஏனைய தினங்களில் மேலதிக கொடுப்பனவையும் வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-8)

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல்

## நாமல் கண்டனம்



(கொழும்பு)

அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகிலும் லிப்டன் சுற்று வட்டத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமெரிக்காவில் கறுப்பின மனிதர் ஜோர்ஜ் பிளாய்ட் கொல்லப்பட்டமைக்கு எதிராக கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்நிலையில், இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, அமெரிக்க தூதரகத்திற்கு அருகிலும் லிப்டன் சுற்று வட்டத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை வன்மையாக கண்டிப்பதாகவும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த பொலிஸ் திணைக்களத்தில் ஆற்றப்பட்ட சேவைகள் இவ்வாறு ஒருசில பொலிஸாரின் செயற்பாடுகளால் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)

# பயிர்களை அழிக்கும் யானைகள் தீர்வுகள் இன்றித் தொடரும் அவலம்

## விடிவு கிடைக்காதோ என்கிறார்கள் புதுக்காட்டு மக்கள்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட இராமநாதபுரம் புதுக்காடு பகுதியில் விவசாயத்தை நம்பி வாழும் பல குடும்பங்கள் நாளாந்தம் யானைகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் யானைகள் பயன்தரும் பல பயிர்களையும் அழித்து வருகின்றன.

இதில் கச்சான், வெங்காயம், வாழை, மரவள்ளி போன்ற பயிர்கள் முற்றாக சேதப்படுத்தப்பட்டன.

கடந்த மாதம் வீசிய காற்றில் முற்றாக முறிந்த வாழைகள் தற்பொழுது மீளவும் பயிரிட்ட நிலையில் அதனைக் காட்டு யானைக் கூட்டம் அழித்து விட்டதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மின்சாரவேலி அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-3-316)

# போதைப் பொருட்களுடன் 373 பேர் கைது

(கொழும்பு)

போதைப் பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 373 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின், கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபானங்களை உடைமையில் வைத்திருந்தமை, விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# வாழ்வாதாரத்திற்கு உதவுங்கள் முறிகண்டி வர்த்தகர்கள் கோரிக்கை

(முறிகண்டி)

முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்தில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் வாழ்வாதார ரீதியில் பாதிப்புக்குள்ளாகியதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கோவிலை சுற்றியுள்ள 65 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு வருகைதரும் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளமையாலும் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்ட காலப்பகுதியில் கடைகள் மூடப்பட்டமையாலும் இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இதனால் பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே தமது வாழ்வாதாரத் திற்கு ஏற்ற வகையில் மாற்றம் செய்து தருமாறும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5-100)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த கடற்படை வீரர்கள் விடுவிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பம்பைமடு மற்றும் பெரியகாடு இராணுவ முகாம்களில் வெலிசர இராணுவ முகாமை சேர்ந்த 276 கடற்படை வீரர்கள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர் .

இந் நிலையில் அவர்களில் 20 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து கொண்ட 201 கடற்படை வீரர்கள் நேற்று காலை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 20 நாட்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து கொண்டவர்களில் பம்பைமடு இராணுவ முகாமிலிருந்த 131 பேரும், பெரியகாடு இராணுவ முகாமிலிருந்த 70 பேருமாக மொத்தம் 201 கடற்படை வீரர்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து கொண்டு வெளியேறியுள்ளனர். (2-5-299)

# கொரோனா வைத்தியசாலை வேண்டாம்; கிராம மட்ட அமைப்புக்கள் மகஜர்



(முறிகண்டி)

அக்கராயன் வைத்தியசாலையை வட மாகாணத்திற்கான கொரோனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து 15 கிராமமட்ட அமைப்புக்கள் மகஜர் கையளித்துள்ளன.

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் உள்ள கிராம மட்ட அமைப்புக்கள் இணைந்தே குறித்த மகஜரை நேற்று முற்பகல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். குறித்த வைத்தியசாலையை வடமாகாணத் திற்கான கொரோனா வைத் திய சாலையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் பிரதேச அமைப்புக்களால் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மகஜர் கையளிக்கப்பட்டது.

(2-5-100-350)

# மடு மாதா ஆலய திருவிழா மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன்



(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆடிமாத திருவிழாவிற்கான முன்னாயத்தம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன் கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம் பெற்றது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பொலிஸ், இராணுவ கடற்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

திருவிழா எதிர் வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நிலையில் முன்னேற்பாடுகள், சுகாதார நடவடிக்கைகள், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

இதில் திருவிழாவின் போது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பக்தர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி திருவிழா நடைபெறும் எனவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# சட்டவிரோத மண்ணகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம், கல்லாறுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி ,முல்லைத் தீவு மாவட்ட விசேட பொலிஸ் பிரிவினருக்கு நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற தகலுக்கமைய கல்லாற்றுப் பகுதியில் வைத்து இரண்டு டிப்பர் சாரதிகள் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு டிப்பர்களும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (2-5-316)

# சுதந்திரத்திற்குப் பின்
# இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

15

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஐந்தாவது பாராளுமன்றம் (2001-2004) | | | |
|---|---|---|---|
| பிரதமர் ரணில் விக்கிரமசிங்க | எதிர்க்கட்சித் தலைவர் 18 டிசெம்பர் 2001- 31 ஜனவரி 2002 ரட்ணசிறி விக்கிரமநாயக்க | எதிர்க்கட்சித் தலைவர் 06 பெப்ரவரி 2002- 07 பெப்ரவரி 2004 மகிந்த ராஜபக்ஷ | சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா |

| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஆறாவது பாராளுமன்றம் (2004-2010) | | | |
|---|---|---|---|
| பிரதமர் 2004 ஏப்ரல் 06- 2000 நவம்பர் 19 மகிந்த ராஜபக்ஷ | பிரதமர் 2005 நவம்பர் 19- 2010 ஏப்ரல் 20 ரட்ணசிறி விக்கிரமநாயக்க | எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க | சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார |

| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஏழாவது பாராளுமன்றம் (2010-2015) | | | | |
|---|---|---|---|---|
| பிரதமர் 2010 ஏப்ரல் 21- 2015 ஜனவரி 09 தி.மு. ஜயரத்ன | பிரதமர் 2015 ஜனவரி 09- 2015 ஓகஸ்ட் 21 ரணில் விக்கிரமசிங்க | எதிர்க்கட்சித் தலைவர் 2010 ஏப்ரல் 21- 2015 ஜனவரி 09 ரணில் விக்கிரமசிங்க | எதிர்க்கட்சித் தலைவர் 2015 ஜனவரி 02- 2015 ஓகஸ்ட் 21 நிமால் சிறிபால டி சில்வா | சபாநாயகர் 22 ஏப்ரல் 2010- 25 ஜீன் 2015 சமல் ராஜபக்ஷ |

முதலில் தான் விரும்பும் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் சின்னத்திற்கு எதிரே புள்ளடி இடுதல் வேண்டும். அதன் பின்னர் அக்கட்சியின் வேட்பாளர் பட்டியலிலுள்ள மூன்று வேட்பாளர்களுக்கு தனது மூன்று விருப்பத்தேர்வு வாக்குகளை அளிக்க வேண்டும்.

**கட்சிகளுக்கான உறுப்பினர் எண்ணிக்கைகளைத் தீர்மானித்தல்**

முதலில் கட்சிகள் பெற்ற வாக்குகள் எண்ணப்படும். அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது குழுவுக்குரிய போனஸாக அக்கட்சியிலிருந்து ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்படுவார்.

உறுப்பினர்களை ஒதுக்குவதற்காகத் தகுதி பெறும் ஒரு கட்சியோ அல்லது குழுவோ குறைந்த பட்சம் மொத்த வாக்குகளில் இருபதில் ஒரு பகுதியையாவது **(5%)** பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு பெறாத கட்சிகளும், குழுக்களும் நீக்கப்படும்.

அளிக்கப்பட்ட மொத்த வாக்கு எண்ணிக்கை

| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது பாராளுமன்றம் (2015-2020) | | | | | |
|---|---|---|---|---|---|
| எதிர்க்கட்சித் தலைவர் 03 செப்டெம்பர் 2015- 17 டிசெம்பர் 2018 இரா. சம்பந்தன் | எதிர்க்கட்சித் தலைவர் 18 டிசெம்பர் 2018 21 நவம்பர் 2019 மகிந்த ராஜபக்ஷ | எதிர்க்கட்சித் தலைவர் 03 ஜனவரி 2020-02 மார்ச் 2020 சஜித் பிரேமதாஸ | சபாநாயகர் 01செப்டெம்பர் 2015- 02 மார்ச் 2020 கரு ஜெயசூரிய | பிரதமர் 2015 ஓகஸ்ட் 24- 2019 நவம்பர் 21 ரணில் விக்கிரமசிங்க | பிரதமர் 2015 நவம்பர் 21- இன்று வரை மகிந்த ராஜபக்ஷ |

**2020ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை**

மாவட்ட ரீதியில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணம் (7), வன்னி(6), அநுராதபுரம்(9), பொலநறுவை (5), குருநாகல்(15), புத்தளம்(8), மட்டக்களப்பு (5), அம்பாறை (திகாமடுல்ல)(7), திருகோணமலை(4), கண்டி(12), மாத்தளை(5), நுவரெலியா (8), கொழும்பு(19), கம்பஹா(18), களுத்துறை (10), பதுளை(9), மொனராகலை (6),இரத்தினபுரி(11), கேகாலை(9) காலி(9), மாத்தறை(7), அம்பாந்தோட்டை(7) மொத்தம்(196)

**வேட்பாளர்கள்**

இலங்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையில் கட்சிப் பட்டியல் மூலம் அல்லது சுயேச்சைக் குழுக்களின் பட்டியல் மூலமே வேட்பாளர்கள் நிறுத்தப்படுகின்றார்கள். இலங்கையில் அங்கீகாரம் பெற்ற கட்சி அல்லது சுயேச்சைக் குழுக்கள் தாங்கள் நியமிக்கும் வேட்பாளர்கள் அடங்கிய பட்டியல்களுடன் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வார்கள்.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்கும் தனித்தனியாக நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும். ஒவ்வொரு குழுவின் பட்டியலிலும், அந்தந்த மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையை விட மூன்று மேலதிக வேட்பாளர்கள் அடங்கியிருக்கவேண்டும்.

இதை முன்னுரிமைப்பட்டியல் என அழைப்பர். அவ்வேட்புமனு மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் சம்பந்தப்பட்ட கட்சியின் செயலாளரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியினால் கையளிக்கப்படுதல் வேண்டும். ஒரு சுயேட்சைக் குழுவின் பட்டியல் ஒரு சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்டு அக்குழுவின் தலைவரால் கையளிக்கப்பட வேண்டும்.

| பாராளுமன்றத் தேர்தல் 2000 | | | | | |
|---|---|---|---|---|---|
| A- மாவட்டரீதியில் ஆசனங்கள்<br>B-தேசியப் பட்டியல் ஆசனங்கள்<br>C-பெற்ற மொத்த ஆசனங்கள் | பெற்ற மொத்த வாக்குகள் | % | பெற்ற ஆசனங்கள் | | |
| | | | A | B | C |
| மக்கள் கூட்டணி (PA) | 3,900,901 | 45.11% | 94 | 13 | 107 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,477,770 | 40.22% | 77 | 12 | 89 |
| மக்கள் விடுதலை முன்னணி | 518,774 | 6.00% | 8 | 2 | 10 |
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி | 106,033 | 1.23% | 5 | 0 | 5 |
| முஸ்லிம் தேசிய ஐக்கியக் கூட்டமைப்பு | 197,983 | 2.29% | 3 | 1 | 4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) | 50,890 | 0.59% | 4 | 0 | 4 |
| தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) | 26,112 | 0.30% | 3 | 0 | 3 |
| சிங்கள பாரம்பரியக் கட்சி | 127,863 | 1.48% | 0 | 1 | 1 |
| சுயேட்சை | 67,288 | 0.78% | 1 | 0 | 1 |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 27,323 | 0.32% | 1 | 0 | 1 |
| புதிய இடதுசாரி முன்னணி | 32,275 | 0.37% | 0 | 0 | 0 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 23,013 | 0.27% | 0 | 0 | 0 |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி(DPLF) | 20,848 | 0.24% | 0 | 0 | 0 |
| ஏனைய கட்சிகள் | 70,595 | 0.82% | 0 | 0 | 0 |
| மொத்தம் | 8,647,668 | | 196 | 29 | 225 |

ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கட்சிகளினதும் சுயேட்சைக்குழுக்களினதும் பட்டியலில் உள்ள பெயர்கள் சிங்கள அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்குமான இலக்கங்கள் வழங்கப்படும். இம்முறையில் வாக்காளர் ஒருவர் வாக்களிப்பின் போது முதன்

யிலிருந்து தகுதி பெறாத கட்சிகளும் குழுக்களும் பெற்ற வாக்குகள் கழிக்கப்படும். மிகுதி, அத்தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவாகவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையிலிருந்து ஒன்றைக் குறைத்து **(Bonus seat)** வரும் எண்ணினால் பிரிக்க வரும் ஈவு, ஆரம்பச் சுற்றில் ஒரு உறுப்பினரைப் பெறுவதற்குத் தேவையான வாக்கு எண்ணிக்கையாகும். மேற்படி ஈவினால் தகுதிபெற்ற கட்சிகளும், குழுக்களும் பெற்றவாக்குகளை வகுக்கும் போது கிடைக்கும் ஈவுகளுக்குச் சமனான எண்ணிக்கையில் முதற் சுற்றில் உறுப்பினர்கள் ஒதுக்கப்படுவார்கள். (தொடரும்)

# குறுகிய சிந்தனை கொண்ட குடும்ப ஆட்சியை விலக்குவோம்

## அறைகூவுகிறார் அநுரகுமார

(கொழும்பு)

**பொதுத் தேர்தலின் பின்னர் ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில் நாடு சிக்கிக் கொள்ளாமல் தடுக்க வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் மக்களின் உரிமை மீறப்படும் போது அதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு தேசிய மக்கள் சக்தியை வலுப்படுத்த மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்தார்.**

தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமராக மகிந்த ராஜபக்ஷவும் பல முக்கிய அமைச்சுக்களை தன்வசம் கொண்டுள்ள அமைச்சராக சமல் ராஜபக்ஷவும் ஜனாதிபதியால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முக்கிய ஜனாதிபதி செயலணிகளின் பிரதானியாக பசில் ராஜபக்ஷவும் என ராஜபக்ஷ குடும்பம் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. இது ஜனநாயக ஆட்சி கிடையாது. எனவே மேலும் காலம் தாழ்த்தாமல் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஆனால் தேர்தல் நடத்தப்படும் அதேவேளை மூன்று பிரதான காரணிகளில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். தேர்தலைக் காரணம் காட்டி எந்தவொரு பிரஜையும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகக்கூடாது. அதே போன்று தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகளின் உயிருக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடாது மற்றும் அரசியல்வாதிகளுக்கு பிரசாரங்களின் ஊடாக தமது கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கு சாதாரண சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட



வேண்டும் என்பதே அந்த மூன்று காரணிகளாகும்.

இந்தக் காரணிகளை கவனத்திற்கொண்டு ஓகஸ்ட் மாதம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது மக்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதில் நேரம் இல்லை.

மாறாக ரணில் - சஜித் தலைமைத்துவம் தொடர்பிலான பிரச்சினையும் சிறிகொத்தாவை யார் கையகப்படுத்திக் கொள்வது என்ற குறுகிய அரசியல் நோக்கமே அவர்களிடம் காணப்படுகிறது. கடந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலில் யுத்தத்தை நிறைவு செய்து நடத்தப்பட்ட தேர்தலில் 18 இலட்சத்துக்கும் அதிக வாக்கு வித்தியாசத்தில் ராஜபக்ஷ அரசாங்கம் வெற்றிபெற்ற போதிலும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் 20 உறுப்பினர்கள் அதற்கு உதவி செய்தனர். அதே போன்ற அச்சுறுத்தல் தற்போதும் காணப்படுகிறது.

எனவே ஐக்கிய தேசிய கட்சி எந்தச்சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவதற்கு பதிலாக அதே வழியில் பயணிக்கும் கட்சியாகவே காணப்படும். இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமையிலேயே பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் நாம் தேசிய மக்கள் சக்தியாக பலமான கூட்டணியாகக் களமிறங்கியுள்ளோம்.

எனவே நாம் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். பாராளுமன்றத்தில் மக்களின் உரிமைகள் மீறப்படுகின்ற போது அந்த உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற அமைப்பாக தேசிய மக்கள் சக்தி செயற்படும். அதற்கான பலமான கட்சியாக நாம் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றம் தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் விமர்சனம் நிலவுகின்றது. நாட்டில் ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறும் போது அது பாராளுமன்றத்தைப் பாதிக்க வேண்டும் என்று மக்கள் பிரார்த்திக்கும் நிலைமையே காணப்படுகிறது. பாராளுமன்றத்தின் கொள்கையை மதிப்பவர்கள் இல்லாமை, பாராளுமன்றத்திற்கு உரிய கௌரவம் வழங்கப்படாமை மற்றும் ஊழல் மோசடிக்காரர்கள் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். இவற்றைச் சரி செய்ய தேசிய மக்கள் சக்தியின் பலமான குழு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சீனாவில் இருந்து வந்த அடையாளம் தெரியாத உயிரினம்



(கொழும்பு)

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றில் இருந்து, அடையாளம் தெரியாத ஊர்வன வகை உயிரினம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் அளித்த தகவலையடுத்து, இந்த உயிரினத்தை, தாம் பொறுப்பேற்றுள்ளதாக வன விலங்குகள் திணைக்களத்தின் மேல் மாகாண உதவிப் பணிப்பாளர் லலித் விக்ரமராச்சி, தெரிவித்துள்ளார்.

இந்த உயிரினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், விரைவில் இந்த உயிரினம் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குரு கேட்ட தட்சணை!

ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா!அந்த ராஜாவுக்கு ஒரு கவலை! அவருக்கிருக்கிற ஒரே பிள்ளை சரியாக படிக்காமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறானே என்ற கவலை தான்! ராஜா கவலையாக இருப்பதைப் பார்த்துவிட்டு அமைச்சர் அருகில் வந்தார். "அரசே நம் இளவரசரை பக்கத்தில் இருக்கிற காட்டுக்கு அனுப்பி... அங்கேயிருக்கிற முனிவரிடம் சிறிதுநாள் பாடம் படித்துவிட்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால் இவர் புத்திசாலியாக ஆகிவிடுவார் என்று நினைக்கிறேன்! " என்றார். ராஜாவுக்கும் இந்த யோசனை சரி என்று தோன்றியது. உடனே இளவரசனை அழைத்துக் கொண்டு அந்த முனிவர் இருக்கிற ஆசிரமத்துக்குப் போனார்.

அங்கே ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து கொண்டு அந்த முனிவர் தன்னுடைய சீடர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். சொல்லிக் கொடுப்பதிலேயே கவனமாக இருந்தார். அதனாலே பக்கத்தில் வந்து நின்று கொண்டிருக்கின்ற ராஜாவை அவர் கவனிக்கவில்லை.இது ராஜாவுக்கு மிகவும் அவமானமாக போய்விட்டது! ஆத்திரம் தலைக்கு ஏறியது. உடம்பு துடித்தது.

இருந்தாலும் மகனை அவரிடம் சேர்க்க வேண்டுமே என்பதற்காக பொறுத்துக் கொண்டார் .பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தார்.கோபத்தை வெளியிலே காட்டிக் கொள்ளவில்லை.சிறிது நேரம் கழித்து முனிவர் நிமிர்ந்து பார்த்தார்.ராஜா விடயத்தைச் சொன்னார். சரி என்று இளவரசனை தன்னுடைய சீடனாக சேர்த்துக் கொண்டார் அந்த முனிவர்.

அவனுக்கு பாடம் சொல்லி கொடுக்க ஆரம்பித்தார்.ராஜா பையனை சேர்த்துவிட்டு திரும்பிப் போய்விட்டார்.பல வருடங்கள் ஆகிவிட்டது.இளவரசன் படிக்க வேண்டியதெல்லாம் படித்துக் கொண்டான். அரண்மனைக்குத் திரும்புகின்ற நேரம் வந்தது. நேராக குருவிடம் போனான். "குருதட்சணையை" அவர் பாதத்திலே வைத்து வணங்கினான்.குரு நிமிர்ந்து பார்த்தார்." இப்ப குரு தட்சணை எதுவும் எனக்குத் தேவை இல்லை.இதை திருப்பி எடுத்துக் கொள்... நான் கேட்கின்ற பொழுது கேட்பதைக் கொடுத்தால் போதும்" என்று விட்டார். குரு பேச்சுக்கு மறுபேச்சு பேச லாமா? இளவரசன் பேசாமல் திரும்பி வந்துவிட்டான். இளவரசன் புத்திசாலியாக திரும்பி வந்ததிலே அந்த ராஜாவுக்கு மிகவும் சந்தோசம். இருந்தாலும் அந்த முனிவர் ஆரம்பத்திலே தன்னை அலட்சியப்படுத்தினார் என்பதை ராஜா மறக்கவில்லை...அந்த கோபத்தை இப்போது காட்டினார்.

படைவீரர்களைக் காட்டுக்கு அனுப்பி அந்த ஆசிரமத்தை சூறையாடச் சொன்னார்.அவ்வளவு தான்.. இவர்கள் போய் அடித்து நொறுக்கிக் கொண்டு வந்துவிட்டார்கள்.இது இளவரசனுக்குத் தெரியாது.சிறிது காலம் கழித்து இளவரசன் தன்னுடைய குருவைப் பார்ப்பதற்காக காட்டுக்குப் போனான். அங்கே போய்ப் பார்த்தால் குருவையும் காணவில்லை, ஆசிரமத்தையும் காண வில்லை! காடு பூராகவும் அலைந்து திரிந்தான்.

கடைசியிலே ஒரு ஆற்றங்கரையிலே அந்த குருவின் ஆசிரமம் தெரிந்தது. ஓடிப் போய் குருவை வணங்கினான்.அவர் பாதத்திலே குருதட்சணையை வைத்தான்.இப்பவும் முனிவர்அதைக் தொடவில்லை... தேவைப்படுகின்ற பொழுது வாங்கிக் கொள்கின்றேன் என்று சொல்லி விட்டார். சரி... என்று சொல்லி விட்டு இளவரசன் புறப்பட்டான். ஆசிரமத்துக்கு வெளியிலே சில சீடர்கள் இரகசியமாக இவனை சுட்டிக்காட்டி என்னமோ பேசிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் உற்று கவனித்துக் கேட்டான்.

தன்னுடைய குருவின் ஆசிரமத்தை அழித்தது தன்னுடைய தந்தை தான் என்னும் விபரத்தைப் புரிந்து கொண்டான். அவ்வளவு தான் கோபம் வந்துவிட்டது."இப்பவே போய் என் தந்தையின் தலையை வெட்டிக் கொண்டுவந்து என் குருவின பாதத்திலே வைக்கிறேன் பார்! " என்று கத்தினான்.வெறியோடு வாளை உருவிக் கொண்டு புறப்பட்டான். சீடர்கள் ஓடிப்போய் குருவிடம் விடயத்தைச் சொன்னார்கள்."ஓடிப்போய் இளவரசனைத் தடுத்து, இங்கே அழைத்துக் கொண்டு வாருங்கள்! " என்றார் குரு. அழைத்துக் கொண்டு வந்தார்கள்.இளவரசன் கோபத்தோடு வந்தான். முனிவர் அவனைப் பார்த்தார்."இப்போது எனக்கு குருதட்சணை வேண்டும்" என்றார்." என்ன வேண்டும்?" என்று கேட்டான் இளவரசன்.

"கோபம்" என்றார் குரு " உன்னிடம் இப்பொழுது இருக்கின்ற கோபத்தை எனக்கு குருதட்சணையாக கொடு " என்றார். இளவரசன் தலையை குனிந்து கொண்டு நின்றான் அவர் முன்னால். பின்னர் திரும்பி அரண்மனைக்குப் போனான். இங்கே நடந்தது எல்லாம் அங்கே ராஜாவுக்குத் தெரிந்தது. அவரும் ஓடி வந்து முனிவர் காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டார். இது ஒரு கதை. எங்களிடம் உதவி பெற்று பயனடைந்தவர்களே நமக்குக் கெடுதல் செய்ய நினைக்கிறது உண்டு. அவர்களையும் நம்முடைய பண்பினாலேயே வெற்றி கொள்ள முடியும் என்பது இந்தக் கதையின் கருத்து.

இந்தக் காலத்து பையன் ஒருத்தன் ஒரு வாத்தியாரிடம் நல்ல பண்புகளைக் கற்றுக் கொள்வதற்குப் போனான்.ஒரு வெள்ளிக் குத்து விளக்கை அவருக்கு முன்னால் குருதட்சணையாக வைத்தான்... சேர் இதை குருதட்சணையாக ஏற்றுக் கொண்டு நீங்கள் எனக்கு சில நல்ல பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுகக வேண்டும் என்று கேட்டுக் கெண்டான். வாத்தியார் நிமிர்ந்து பார்த்தார்."உனக்கு இனிமேல் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையப்பா... நீ நல்லவனா ஆகிவிட்டாய் இப்பொழுது என் மனது நிறைந்திருக்கிறது "என்றார். ஏன் அப்படி சொல்கிறீர்கள்?" என்றான் பையன்." இந்த குத்துவிளக்கு போன மாதம் எங்க வீட்டிலே திருட்டுப் போனது தான் " அப்படி என்றார் வாத்தியார்.

பலவற்றை காட்டுவதுதான் மனதின் வேலை. அவற்றுள் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்வதுதான் அறிவின் வேலை. நம் செயலுக்கு முதன்மையானது அறிவுதான்.
– பகவத்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆபத்து என்கிறது கணிதம் கேடு என்கிறது வாக்கியம்

அது ஒரு நாடக மேடைபோல அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. நடிப்புப் பாத்திரங்களாக இருக்க வேண்டும் சிலர் கதிரைகளில் அமர்ந்திருக்கின்றனர்.

முதுமை, நடு வயது, இளவல் என்ற அடையாளங்கள் அவர்களில் தெரிகிறது.

இது மேடையென்றால் நாடகம் பார்க்க வந்தவர்கள் மிகச் சொற்பம்.

நாடகம் என்றால் ஊர் திரண்டு வந்து விடுமே இந்த நாடகத்துக்கு மட்டும் மகா சனங்களைக் காணவில்லை. என்ன காரணம். எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

நாடகம் சரியில்லையா, நடிப்புப் போதவில்லையா அல்லது ஒரே நாடகத்தை திரும்பத் திரும்பப் போடுகிறார்களா?

எதுவும் புரியவில்லை. எதற்கும் நாடகத்தை முழுமையாகப் பார்த்தால் எல்லாம் தெரிந்து விடும் என்று நினைத்தேன்.

என் நினைப்பை மேடையில் இருந்த நடிகர்கள் அறிந்து கொண்டதுபோல ஒலிவாங்கியில் அறிவிப்புத் தொடங்கியது.

எங்கள் இனம், எங்கள் சனம், எங்கள் உறவுகள்.

உங்களுக்காக நாங்கள். எங்களுக்காக நீங்கள். ஒற்றுமைதான் தமிழர்களின் பலம்.

ஓர் அன்பர் உரையாற்றுகிறார். இல்லை இல்லை அறிவிப்புச் செய்கிறார். அறிவிப்பை கேட்டதும் அதிர்ந்து போனேன்.

இஃதென்ன நாடகம். புரியாமல் இருக்கிறதே என்று எனக்குள் குழப்பம்.

இதோ! ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட... வருகிறார் என்று மன்னர் காலத்து மான்மியம் போல கட்டியம் கூற, ஒருவர் எழுந்து பேசுகிறார்.

அன்பான தமிழ் உறவுகளே! உங்கள் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். சிறை சென்ற வரலாறு எங்களுக்கே உண்டு.

நீங்கள் எங்களை ஆதரித்தால், தென்பகுதிப் பேரினவாத ஆட்சியாளர்களுக்குத் தக்க பாடம் புகட்டுவோம்.

சர்வதேச விசாரணையை மீண்டும் முடுக்கி விடுவோம். காணாமல்போனவர்களை காடு மேடெல்லாம் தேடிக் கண்டு கொண்டு வருவதே எங்கள் இலட்சியம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காய் சிறைக்கதவுகளை உடைப்பதற்கும் நாங்கள் தயங்கோம்.

நீங்கள் உங்கள் வாக்குகளை எங்களுக்கே வழங்குங்கள்.

முன்னாள் பேராளிகளே! ஒன்றுபடுங்கள். புலம்பெயர் தேசத்து உறவுகளே! தேர்தல் முடிய வெற்றியோடு உங்களைச் சந்திப்போம். தமிழினம் பற்றிச் சிந்திப்போம்.

எங்கள் இலட்சியத்தை அடைய நாம் காத்த பொறுமை முடிந்து விட்டது.

இனி எங்கள் போராட்டம் வெடிக்கும் இவ்வாறு கர்ச்சிப்புக் கேட்டதும் அலறித் துடித்தேன். கட்டிலால் விழுந்தேன்.

அட, கண்டது தேர்தல் காலத்துக் கனவு என்றறிந்தேன். ஓடிச் சென்று திருக்கணிதத்தைப் பார்த்தேன் ஆபத்து என்றிருந்தது.

வாக்கியப் பஞ்சாங்கமோ முழுவதும் கேடு என்று கூறியது.

## 30 பொலிஸார் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் முன்னிலை சோசலிஷ கட்சியினரால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தடுப்பதற்காக கடமையில் ஈடுபட்டிருந்த கொள்ளுப்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 30 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் அத்திட்டிய தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தல், தொற்று நீக்கம் மற்றும் நபர்களுக்கிடையிலான இடைவெளியை பேணுதல் ஆகிய சட்டவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க மினியா பொலிஸ் நகரில் வெள்ளையின அமெரிக்க பொலிஸார் ஒருவரால் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புலோய்ட்டின் மரணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் முன்னிலை சோசலிஷ கட்சியினரால் கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் கொள்ளுப்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்து தடை உத்தரவை பெற்றுக் கொண்டிருந்ததுடன் அதனை கருத்திற் கொள்ளாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 53 பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தின் போது கடமையில் ஈடுபட்டிருந்த கொள்ளுப்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 30 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தனிமைப்படுத்தி வைப்பதற்கு பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது. (ஐ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஒழுக்கம் போர்க்களம் போன்றது. நாம் ஒழுக்கத்தோடு வாழ வேண்டுமானால் ஓயாமல் மனதோடு போராட வேண்டும். - ஓஷோ

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில** கல்வியங்காடு GPS மைதானப் பிரதேசம், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடப் பிரதேசம், திருநெலவேலி பால்சபை பிரதேசம், இராஜவீதி, கோப்பாய் காவல் நிலையம், GPS பிரதேசம், அம்பலவாணர் வீதி, சபாபதிப்பிள்ளை வீதி, இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம் சந்தியிலிருந்து இணுவில் புகையிரத நிலையம்வரை, மருதனார்மடம் - யாழ் நுண்கலைப்பீடம், அராலிப் பிரதேசம், செட்டியார் மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார்கோவிலடி, அராலி ஐயனார்கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை, குட்டியப்புலம், நிலாவரை, நவக்கிரி, சிறுப்பிட்டி, புத்தூர், ஊறணி, வீரவாணி, ஆவரங்கால், வாதரவத்தை, பெரிய பொக்கணை, ஈவினை, அச்சுவேலி, அச்சுவேலி தோப்பு, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, பலாலி கிழக்கு, கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு, வளலாய், செல்வநாயகபுரம் வயாவிளான், சென். ஜேம்ஸ சந்தி பலாலி, மருதடிசந்தி பலாலி, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, அச்செழு, திண்ணை organic பண்ணை, Sarah Industries (Pvt) Ltd, Industrial Development Estate, Evershine Amana Roofing, Union Enterprise, Mascons Company Lane, வெங்கடேஸ்வரா ரேடிங் பிறைவேற் லிமிற்ரெட், Noble Int Papers Lanka (Pvt) Ltd, விக்கிரமரட்ன பிறைவேற் லிமிற்ரெட் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி, கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஒலைத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்

## குணமடைந்தோர் 1150

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம மேலும் 28 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை ஆயிரத்து 150 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் ஆயிரத்து 869 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 708 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதனுடன் 62 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## மரண தண்டனை கைதிகளுக்கு தீவு!

(கொழும்பு)

பாரிய குற்றங்கள் தொடர்பில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள், மட்டக்களப்பில் உள்ள தீவொன்றில் தடுத்து வைப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதென, நீதி, மனிதவுரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தொழுநோயாளர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தீவில், தற்போது இரண்டு நோயாளர்கள் மாத்திரமே இருப்பதாகவும், அவர்கள் இருவரும் தற்போது பூரண குணமடைந்துள்ள தாகவும் தெரிவித்த அமைச்சர், இந்தத் தீவை சிறைச்சாலைகள் திணைக்களம் பொறுப்பேற்று, பாரிய குற்றங்களை செய்த குற்றவாளிகள் மற்றும் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டவர்களை இத்தீவில் தடுத்து வைப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-4-8)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

கருணை வடிவமான கடவுள் வாள், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அன்று. வேல் என்பது ஞானம். அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உள்ளன.

1.ஆழம் 2.அகலம் 3.கூர்மை

வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கிறது. நடுப்பகுதி விசாலமாக இருக்கின்றது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கிறது.

“ஆழ்ந்தகன்ற நுண்ணியனே” என்பார் மணிவாசகர். எனவே ஞானமாகிய கருவிகளை இறைவன் வைத்திருப்பது நமக்கு ஞானங்களை வழங்கும் பொருட்டு இவைகளை நுணித்து உணர வேண்டும். (தொடரும்)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆதிபராசக்தியின் பத்து தோற்றங்களும் பெயர்களும்

**மாதங்கி:** என்றும் உயர்நிலையில் இருப்பவள். அனைத்து கேடுகளையும் தனதாக்கி நன்மையை பிறருக்கு அருள்பவள்.

**புவனேஸ்வரி:** மென்மையான இதழ் உடையவள். பூமியை காப்பாற்றும் நாயகி. மனதில் ஏற்படும் எண்ணங்களுக்கு காரணமானவள். அழகும், சுந்தர வதனமும் நிறைந்தவள்.

**பகுளாமுகி:** பயங்கர ஆயுதங்களை தாங்கியவள். முட்கள் நிறைந்த கதாயுதம் இவளின் பிரதான ஆயுதம். எதிர்பாராத நிலையில் அசுரர்கள்ள கதாயுதத்தால் தாக்குபவள். வேகமான பயணத்தால் எதிரிகளின் குழப்பத்திற்கு காரணமானவள்.

**திரிபுரசுந்தரி:** பதினாறு வயது கன்னிகையின் உருவை கொண்டவள். புதிய சிந்தனை மற்றும் புதிய கோட்பாடுகளின் மொத்த உருவம் என்றும் பிறருக்கு நுட்பமான ஞானத்தை வழங்கியவள். சிவனின் உடலில் அமர்ந்து தியானிக்கும் உருவம் இவளுடையது.

**தாரா:** நட்சத்திரத்தை போல ஒளி வீசுபவள். தனது மஹா சக்தியை உள்ளே வைத்து எளிமையாக காட்சியளிப்பவள். (தொடரும்)

# ஒரு நிமிடத்தில் கிராமத்தை மயானமாக்கிய பயங்கரவாதிகள்

# அப்பாவிப் பொதுமக்கள் 59 பேர் கொன்று குவிப்பு

(அபுஜா)

நைஜீரியா கிராமத்தில் போகோஹராம் பயங்கரவாதிகள் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் 59 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

நைஜீரியா நாட்டில் மத அடிப்படையிலான 'போகோஹராம்' பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

இவர்களது அடிப்படை நோக்கம், அங்கு மத சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகும். தலைமையோ, ஒழுங்கான கட்டமைப்போ இந்தப் பயங்கரவாதிகளுக்கு இல்லை என்றாலும் அவ்வப்போது வன்முறை செயல்களை நடத்தி கதிகலங்க வைக்கிறார்கள்.

அந்த வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை போர்னோ மாகாணத்தில் உள்ள கிராம மக்கள் மீது பயங்கரவாதிகள் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தி, அவர்களை இரத்த வெள்ளத்தில் சாய்த்தனர். இக்கொடிய தாக்குதலால் அந்த கிராமமே போர்க்களம் போல் காணப்பட்டது.

ஈவிரக்கமின்றி, காட்டுமிராண்டித்தனமாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 59 அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டதாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-5)



## ஒரு இலட்சம் ஸ்ரேலிங் பவுண்ஸ் பரிசுத்தொகை தானமாகக் கொடுத்த காற்பந்துக் கழகம்

(லண்டன்)

பிரித்தானியாவில் உள்ள பெண்கள் காற்பந்து கழகத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் தங்களுக்கு கிடைத்த ஒரு இலட்சம் ஸ்ரேலிங் பவுண்ஸ் பரிசுப் பணத்தை தொண்டுப் பணிக்காக கொடுத்துள்ளமைக்கு பாராட்டுகள் குவிந்துள்ளன.

கொரோனா காரணமாக மார்ச் மாதமே காற்பந்து தொடர் நிறுத்தப்பட்டு புள்ளிகள் அடிப்படையில் பிரித்தானிய பெண்கள் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து அந்த அணிக்கு ஒரு இலட்சம் ஸ்ரேலிங் பவுண்ஸ் பரிசாக வழங்கப்பட்டது.

இப்பணம் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்குள்ளானவர்களுக்கு செலவிடப்படவுள்ளது.

இது குறித்து அணியின் காப்பாளர் கூறுகையில், பரிசுப் பணத்தை தானமாகக் கொடுத்தது மனதிற்குத் திருப்தியாக உள்ளது.

வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்படும் பெண்கள், சிறுமிகளுக்கு இந்தப் பணம் பயன்படும். கொரோனா முடக்க நிலையில் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளது என மேலும் தெரிவித்தார். (2-5)




## அரசியல் பிரச்சினையல்ல அறிவியல் பிரச்சினை

## விசாரணைக்குத் தயார்–சீனா

(பீஜிங்)

கொரோனா வைரஸ் தொற்றின் தோற்றம் பற்றிய உலக சுகாதார நிறுவனத்தின் சுதந்திரமான விசாரணையை சீனா ஆதரிப்பதாக ரஷ்யாவுக்கான சீனத் தூதுவர் ஜாங் ஹன்குய் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்ட 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் கொரோனா வைரஸ் தொற்றின் தோற்றம் பற்றிய விசாரணைக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்திருந்தன.

இந்நிலையில் மொஸ்கோவில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்றின் தோற்றம் பற்றிய உலக சுகாதார நிறுவனத்தின் சுதந்திரமான விசாரணையை நாங்கள் ஆதரிக்கிறோம்.

ஆனால், முன்கூட்டியே குற்றம் சுமத்தும் மன நிலையில் இருந்து விசாரணையை நடத்துவதற்கு நாங்கள் எதிரானவர்கள்.

இந்த விவகாரத்தில் உலக சுகாதார நிறுவனத்துடனும் சரி, உலக நாடுகளுடனும் சரி சீனா ஒத்துழைக்க தயாராக இருக்கிறது. அது எங்கள் கடமை.

ஆனால், கொரோனா வைரஸின் தோற்றத்தை தீர்மானிப்பது ஒரு அறிவியல் பிரச்சினை. அது அரசியல் பிரச்சினை அல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5)

## கொரோனா அலை அடங்க

# சீனாவில் கனமழை 20 பேர் உயிரிழப்பு



(பீஜிங்)

சீனாவின் வுஹான் சுற்றுலாத்தலமான யாங்ஸ்யு உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த 2 ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகிறது. கனமழையில் சிக்கி 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் வுஹான் சுற்றுலாத்தலமான யாங்ஸ்யு உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த 2 ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள 8 மாகாணங்களில் உள்ள 110 ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதனால் 10 ஆயிரத்து 700 ஹெக்டேயர் பரப்புள்ள பயிர்கள் நாசமானதோடு. 2,800 வீடுகளும் சேதம் அடைந்துள்ளன.

இதில் 20 பேர் கனமழைக்கு பலியாகியுள்ளனர். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் தீயணைப்பு வீரர்களோடு பொலிஸாரும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

யாங்ஸ்பு மாகாணத்தில் ஆயிரம் ஹோட்டல்கள், 5 ஆயிரம் கடைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சுற்றுலா பயணிகளும் கிராம மக்களும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கனமழை வெள்ளத்தால் பல கோடி மதிப்புள்ள பொருட்கள் நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## முகக்கவசத்தால் 2வது அலைகளை தடுக்க முடியும் இங்கிலாந்து விஞ்ஞானிகள் ஆய்வில் தகவல்

(லண்டன்)

கொரோனா வைரஸ் தொற்று பரவலை ஊரடங்கு மாத்திரமே தடுத்து நிறுத்தி விடாது. இதில் முகக்கவசங்களுக்குத்தான் முக்கிய பங்கு இருக்கிறது என்று இங்கிலாந்து விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலகின் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளைப் பார்த்து விட்டது கொரோனா வைரஸ்.

இதனால் 72 இலட்சத்துக்கும் அதிகமானோர் இந்த தொற்றின் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். அது மட்டுமின்றி சிகிச்சைகள் பலனின்றி 4 இலட்சத்து 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து உள்ளனர்.

கொரோனாவுக்கு இன்னும் முறையான மருந்துகள் கண்டு பிடிக்கப்படவில்லை. கொரோனா வராமல் தடுக்க தடுப்பூசி வந்திருக்கிறதா? என்றால் அதுவும் பரிசோதனைகள் அளவில்தான் இருக்கின்றன. ஆனாலும் நாளுக்கு நாள் பல்லாயிரம் பேர் இந்த தொற்றுக்கு புதிது புதிதாக ஆளாகி வருகிறார்கள்.

உலக நாடுகளை கொரோனா பாடாய்ப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாடும் பொருளாதார ரீதியில் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. ஊரடங்கால் பெரும் இழப்புகளை சந்தித்துள்ள உலக நாடுகள், சுகாதார வசதிகளையும் உட்கட்டமைப்புகளையும் மேம்படுத்த பெருந்தொகைகளை செலவழிக்கிற நிலையும் ஏற்பட்டுள்ளது.

அதற்குள் கொரோனா வைரஸ் தொற்றின் 2 ஆவது அலையும் வந்து தாக்கும் என விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் எச்சரிக்கத் தொடங்கி உள்ளார்கள்.

இந்த நேரத்தில் இங்கிலாந்து நாட்டில் விஞ்ஞானிகள் ஒரு முக்கிய ஆய்வை நடத்தி உள்ளனர்.

மக்களிடையே கொரோனா வைரஸ் தொற்றின் பரவலை, பொதுமுடக்க காலத்தின் முகக்கவச பயன்பாட்டுடன் இணைத்து பல மாதிரிகளின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளனர். இந்த ஆய்வு முடிவுகள்,

கொரோனா வைரஸ் தொற்று பரவலை ஊரடங்கு மாத்திரமே தடுத்து நிறுத்தி விடாது. இதில் முகக்கவசங்களுக்குத்தான் முக்கிய பங்கு இருக்கின்றன.

வீட்டில் சாதாரணமாக தயாரித்து பயன்படுத்தக்கூடிய முகக்கவசங்கள்கூட, கொரோனா வைரஸ் தொற்று பரவலை அதிரடியாக குறைக்கும். அதற்கு ஒரு சிறிய நிபந்தனையும் இருக்கிறது. நமக்கு கொரோனா வைரஸ் தொற்றோ, தொற்றுக்கான அறிகுறிகளோ இருக்கிறதா, இல்லையா? என்பதை பார்க்காமல் பெரும்பாலானவர்கள் முகக்கவசங்களை அணிந்து வாழப் பழகி விட வேண்டும். இப்படி செய்கிறபோது, கொரோனா வைரஸ் பரவலை வியக்கத்தக்க அளவுக்கு குறைக்க முடியும்.

பொதுமக்கள் கொரோனா அறிகுறிகள் தோன்றிய பின்னர் மட்டுமே முகக்கவசங்கள் அணிவதைவிட, எப்போதெல்லாம் வீடுகளை விட்டு வெளியே வருகிறார்களோ, அப்போதெல்லாம் அவர்கள் முகக்கவசங்கள் அணிந்து இருக்க வேண்டும். இது அவர்களுக்கு கொரோனா ஆபத்தை இரு மடங்கு குறைக்கிறது.

அனைவரும் முகக்கவசங்கள் அணிய வேண்டும் என்ற கொள்கையானது, கொரோனா வைரஸ் தொற்றின் 2 ஆவது அலைகளைத் தடுக்க முடியும் என அறிக்கை முடிவுகள் தெரிவிப்பதாக விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் தெரிவிக்கின்றனர். (2-5)

## சாவகச்சேரியில்...

ரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெருங்குளம் சந்தி சாவகச்சேரியைச் சேர்ந்த 28 வயதான ஒரு பிள்ளையின் தாயாரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் (ம-3.30)

## கனடாவில்...

கனடா - ரொறன்டோவில் வசித்துவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் மார்க்கம் நகரில் யாழ்ப்பாணம் குரும்பசிட்டியை சேர்ந்த மதன் மகாலிங்கம் என்ற 45 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

துரித விசாரணைகளை மேற்கொண்ட யோர்க் பொலிஸார் அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அந்நாட்டுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## மிக நீளமான...

சீட்டுக்களும் 23 அங்குலம் நீளமானது.

அதேவேளை, மிக அகலமான வாக்குச் சீட்டுக்கள் கொழும்பு, வன்னி, மட்டக்களப்பு மற்றும் திகாமடுல்ல மாவட்டங்களிற் கானவை. இந்த மாவட்டங்களில் 9 அங்குல அகலமான வாக்குச்சீட்டு அச்சிடப்பட்டுள்ளது. (ம-3)

## ஜூலை 13 முதல்...

பற்றப்படவேண்டிய சுகாதார வழிமுறைகள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3.8)

## கிளிநொச்சி...

மக்களின் பாவனையிலுள்ள அக்கராயன் பிரதேச வைத்தியசாலை கொரோனா வைத்தியசாலையாக மாற்றமடைகிறது.

நேற்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்ட இந்த கலந்துரையாடலில், ஒரு மாதத்திற்குள் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையை, கொரோனா வைத்தியசாலையாக மாற்றும்படி, கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளருக்கு வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இனிமேல் அக்கராயன் பிரதேச மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக மிக நீண்டதூரம் பிரயாணித்து, கிளிநொச்சிக்கே செல்ல வேண்டும்.

அதேவேளை, அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஸ்கந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம், அக்கராயன் பிரதேச வைத்தியசாலை ஸ்கந்தபுரம் பகுதிக்கு நகரும்.

வடக்கில் ஆட்தொகை குறைந்த பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளை கொரோனா வைத்தியசாலையாக மாற்றும் படி பல தரப்பினரும் குறிப்பிட்டு வந்தனர். அக்கராயன் பிரதேசத்தில் பெருமளவு மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் இனி நீண்ட பிரயாணம் மேற்கொண்டே வைத்திய சிகிச்சை பெற வேண்டும்.

மழை காலத்தில் வெள்ளம் பெருகும் பிரதேசம் இது. இந்த பகுதியில் வைத்தியசாலை அமைப்பதால், கொரோனா கிருமி பரவும் அபாயமுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அது தவிர, அக்கராயன் வைத்தியசாலைக்கு செல்ல சீரான பாதையில்லை. மழை காலத்தில் வைத்தியசாலைக்கு செல்லும் வீதிகள் நீரில் மூழ்கி விடும். இவ்வளவு எதிர்மறை அம்சங்களிருந்தும், அக்கராயனை கொரோனா வைத்தியசாலையாக்கியுள்ளது. (ம-3)

## கிணற்றில் தவறி...

தேவிபுரம் பகுதியில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது

இந்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த வள்ளிபுனம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தேவிபுரம் (அ) பகுதியை சேந்த 11 வயதுடைய வடிவேல் விஜுஜன் என்ற சிறுவனே மரணமானவன் ஆவான்

வீட்டில் உணவை அருந்திவிட்டு விளையாடிக்கொண்டிருந்த சிறுவனைக் காணவில்லை என வீட்டார் உறவினர்களின் உதவியோடு தேடியபோது கிணற்றுக்குள் இருப்பது தெரியவந்தது.

உடனடியாக சிறுவனை மீட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்து சென்றபோதும் சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலைத் தகவலில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281)

## கெரோயினுடன்...

கெரோயினை கடத்த முயன்றார் என்ற குற்றச் சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் உடைமையிலிருந்து 50 கிராம் 300 மில்லி கிராம் கெரோயின் கைப்பற்றப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயான 42 வயதுப் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

பூம்புகார் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவ்வழியே சந்தேகத்திற்கு இடமான முறையில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வைத்திய சாலை ஊழியர்கள் போன்று மருத்துவ குறியீட்டு ஸ்ரிக்கர் ஒட்டியவாறு பயணித்த பெண்ணை மறித்து சோதனையிட்டபோதே போதைப்பொருள் அவரது உடைமையில் இருந்து கைப்பற்றப்பட்டது.

அந்தப் பெண்ணுக்கும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள போதைப்பொருள் கடத்தல் சந்தேகநபருக்கும் இடையில் தொடர்பிருப்பதும் பொலிஸாரினால் கண்டறியப்பட்டுள்ளது. (ம-3,32)

## போராட்டம்...

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த செவ்வாய்க்கிழமை முன்னிலை சோசலிச கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. கொரோனா வைரஸ் ஒழிப்பிற்கு சமூக இடைவெளியை பேணுதல் கட்டாயமானதாகும்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தை தடுப்பதற்கு பொலிஸாரால் நீதிமன்ற தடையுத்தரவு பெற்றிருந்த போதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமையால் அதனை கலைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

ஆனாலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடரந்தும் அங்கு செயற்பட்டமையால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மீதே முதலில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில், எதிர்த் தாக்குதலை பொலிஸார் மேற்கொண்டனர். அதற்கான ஒளிப்பதிவு ஆதாரங்கள் காணப்படுகிறது.

தாக்குதலை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியோ, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களோ பொலிஸாருக்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை. தாக்குதலுக்கு பதில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதே தவிர, எவ்வித உத்தரவின் பிரகாரமும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒடுக்கப்படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமல் இருப்பதற்கு ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றுவழிகளை திட்டமிடுமாறும் கொரோனா ஒழிப்பிற்கான தனிமைப்படுத்தல் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய எதிர்ப்பில் ஈடுபடுவோர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். அவர்கள் 14 நாட்கள் வரை தனிமைப்படுத்தப்படுவார்கள் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-3.8)

## கொரோனா...

எது என தொற்று நோய் விஞ்ஞான ஆய்வுப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் கடந்த 8ஆம் திகதி முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள் மத்தியில் இருந்து கோவிட் - 19 வைரஸ் தொற்று பரவலடையக் கூடிய வாய்ப்பு உள்ளது. நாளாந்தம் சுமார் ஆயிரம் பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும். வைரஸை கட்டுப்படுத்தும் ஒரே வழி இதுவாகும் எனத் தெரிவித்தார். (ம-3)

## 16...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 16 வயதான மாணவியொருவரின் வீட்டுக்கு செல்லும் வீதிப் பகுதியில் நிற்கும் சிலர் அவருக்கு தொல்லை கொடுத்து வந்துள்ளனர். இது தொடர்பாக மாணவியின் குடும்பத்தினருக்கும், அவர்களுக்கிடையில் தொடர்ந்து பகை நீடித்து வந்தது.

நேற்று மதியம் அந்த வீதியால் சென்ற மாணவியை வழிமறித்த கும்பல், அவரை வாளால் வெட்டியது. பின்னர் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றது. மாணவி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று இரவு அந்த வீதியால் வாள் வெட்டுக்கு இலக்கான மாணவியின் சகோதரன் சென்ற போது, அவருக்கும் கும்பல் வாள்வெட்டு தாக்குதல் நடத்தியது. இதில் அவர் தலையில் பலத்த படு காயமடைந்தார். எஸ்.இளங்கீரன் (வயது-24) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை, வாள்வெட்டு தாக்குதல் நடத்திய தரப்பிலிருந்தும் 28 வயது மற்றும் 34 வயதுடைய இருவர் சிறிய காயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## அமைதிப் போராட்...

களால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் மீது தேவையற்ற வன்முறைகள் அல்லது தாக்குதல்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதுடன், அவற்றுக்கு நீதியும் வழங்கப்படவில்லை எனவும் மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியுள்ளது. (ம-3)

மஹஜன சம்பத
திகதி 2020/06/11
சீட்டிழுப்பு இலக்கம் 4151
S 3 5 8 6 3 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 11-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2445
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 17 66 67 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0520
P 01 11 30 74 77

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1156
சீட்டிழுப்பு திகதி 11.06.2020 பச்சை
T 18 41 68 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,315,824
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 1663
சீட்டிழுக்கப்படவேண்டிய திகதி 09/04/2020
சீட்டிழுக்கப்பட்ட திகதி 11/06/2020
வெற்றி இலக்கங்கள் 08 17 42 62 K
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.49,113,228

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 947
வர்ணம்: நிலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.06.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 61,716,375/-
வெற்றி இலக்கங்கள் 10 15 30 37 E

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.06.2020 வெற்றி வாரம் 2828 வர்ணம் கபிலம்
ராசி கடகம் வெற்றி இலக்கங்கள் 08 19 39 42
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000

டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 3911
ரூ.100 பரிசுக்காக 295
2020/06/12 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னிலை சோசலிசக் கட்சி நடத்திய போராட்டத்தின் மீதான தாக்குதல் ஜனநாயகத்திற்கு எதிரானது என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ப்ளொய்ட் என்பவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சஜித் பிரேமதாஸ, அமெரிக்கப் பொலிஸார் நடத்திய தாக்குதலுக்கு எதிராக நம் நாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது. இதன்போது இடம்பெற்ற செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கு பங்கம் விளைவிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இதனை நான் எதிர்க்கிறேன்.

ஜனநாயகத்தை மதிக்கும் பொதுமக்கள் எந்த கட்சியின் உறுப்பினராக இருந்தாலும் தங்களின் கருத்தை வெளிப்படுத்த சுதந்திரம் உள்ளது.

பொது மக்கள் வீதியில் இறங்கி ஜன நாயகத்திற்காகப் போராடுவதற்கும் பேசுவதற்கும் சுதந்திரம் உள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவமானது கண்டிக்கத்தக்கது. எந்த விதத்திலும் ஜன நாயகத்திற்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் செயற்படுபவர்களுக்கு இடம் கொடுக்க முடியாது என்றார். (ம-03)

நாகவிகாரை மீது தாக்குதல்

# சந்தேகத்தில் இருவர் கைதாகி மறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாகவிகாரை மீது நடைபெற்ற கல்வீச்சுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தில் இருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர். அத்துடன் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர்கள் நல்லூர் பகுதியைச் சேர்ந்த 26,33 வயதுடைய நபர்களாவர். இவர்கள் இருவரும் யாழ். நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் நேற்று மாலை ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 6 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-3,32)


## இலங்கை விசா நீடிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT



V2 TRAVELS 0768227499 (c-9624)



## Personal Group Class

இரசாயனவியல் (A/L) 2020, 2021, 2022, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும்.

சி.அங்கதன் B.Sc (Chem.Spl)

தொடர்பு - 075 436 4510 (2996)


# வடக்கு மாகாணத்தில் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு!

## பனை அபிவிருத்தி சபைத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையினை பல்வேறு வகையில் தரம் உயர்த்துவதற்குரிய வேலைப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பீ.ஏ.கிருசாந்த பத்திராஜா தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு பனை அபிவிருத்திச் சபை ஊடாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் பனை அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "அமைச்சர் விமல் வீரவன்ச பனை அபிவிருத்திச் சபைக்கு அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதியில் அழிவுற்ற பனை வளங்களை மீளவும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதன் ஊடாக தொழில் வாய்ப்பு இல்லாத இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன், கணவனை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்தினை மேலும் வலுப்படுத்தும் முகமாக அவர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பினை பனை அபிவிருத்திச் சபை ஊடாக பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வங்கிகள் ஊடாக சுய தொழில் கடன்களைப் பெற்று அவர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனை மரம் சார் உற்பத்திகளான ஐஸ்கிறீம், யோகட், பிஸ்கட் போன்ற உற்பத்திகளை அதிகரிக்க அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். அந்த உற்பத்தி பொருட்கள் வெகு விரைவில் வடமாகாணத்தில் உற்பத்தி செய்யவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவற்றின் ஊடாக சந்தை வாய்ப்பு, தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பனை சார் உற்பத்திப் பொருட்களை ஐரோப்பிய நாடுகள், அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது தொடர்பாக தற்போது அமைச்சு மட்டத்தில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றது.

மேலும், உள்ளூர் உற்பத்திகளை சதொச, கீல்ஸ், காகில்ஸ் போன்ற சுப்பர் மார்க்கெற் ஊடாக விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கொழும்பு நகரத்தில் உள்ள சுப்பர் மார்க்கெற்றுகளில் வடமாகாண பனைசார் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது என்றார். (ம-3)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் Bar and Restaurant க்கு அனுபவம் உள்ள Cashier, Waiter, Chef தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0777191906 (c-9692)



## வேலையாள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு மருந்தக அனுமதிச் சான்றிதழ் உள்ள வேலையாள் தேவை. (2998)

தொடர்புகளுக்கு:- 0778855748


மண்டைதீவு

# முகப்பு வயல் முருகனுக்கு இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு முகப்பு வயல் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று காலை 9.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி கொடியேற்றம் இடம்பெறுவதுடன் தொடர்ந்து பத்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறும். (ம-3)


# 31ம் நாள் நினைவு அஞ்சலி

கடந்த 13.05.2020 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## மகாலிங்கம் வீரகத்தி



நாட்கள் தான் கடந்தாலும் உம்
அன்பிற்காய் ஏங்கி வாடுகின்றோம் ஐயா!
கண் கலங்கி கதியின்றி உமைத்
தேடுகின்றோம் ஆனாலும்
விண்ணுலகில் உம் நிம்மதிக்காய்
பிரார்த்திக்கின்றோம்.
இன்னுமொரு ஜென்மம்
ஒன்று இருந்தால் நீங்க
தான் ஐயா தந்தையாக
வரவேண்டும்....
எம் வாழ்வு இறுதி வரை
சென்றாலும் உம் நினைவுகள்
என்றும் மங்காது
மறுபடியும் உம் நெஞ்சத்தில்
தங்குவதற்கு பிறந்திட
வேண்டுகின்றோம் இறைவனை

(C-9694)

துன்னாலை மேற்கு, கரவெட்டி. தகவல்:-குடும்பத்தினர்



## CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT

June 2020க்கான புதிய பிரிவு ஆரம்பம்



G.C.E O/L உடன்

TUTION FEE 30,000/- ONLY

CTHI

CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA

0760579999 | 0213146171 (C-8997)



மீண்டும்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (c-9682)

### அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## யாழில் நேற்று 123 பேருக்கு பரிசோதனை

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் நேற்று வியாழக்கிழமை 123 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றுக்கள் இல்லையென உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார் .(ம-3,18)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.